Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 45

திங்கட்கிழமை
10 ஜனவரி 2022

மார்கழி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16

விலை: 30/=



## தள்ளிப் போகின்றது உள்ளூராட்சி தேர்தல்

கொழும்பு, ஜன.10
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒரு வருடத்துக்குப் பிற்போடுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரத்தில் வெளியிடப்பட 15

## இன்று முதல் நாட்டில் திட்டமிட்ட மின்தடை

கொழும்பு, ஜன.10
இன்று முதல் நாட்டில் திட்டமிட்ட மின் தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்கான அனுமதியை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 15

## கிணற்றில் தவறி வீழ்ந்து 4 வயதுச் சிறுவன் சாவு!



யாழ்ப்பாணம், ஜன.10
நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கில் நேற்றுக் 15

# பதவிக் காலத்தை நீடிக்க கோத்தாபய அரசு முயற்சி

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜனவரி 10
சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி அரசின் பதவிக் காலத்தை நீடித்துக்கொள்வதற்கான முயற்சியில் இறங்கக்கூடாது. அந்த முயற்சி ஒருபோதும் கைகூடாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார். 15

## "சீனா எம் உயிர்த் தோழன்" மேடையில் உருகிய பிரதமர்



கொழும்பு, ஜன.10
சீனா எமது உயிர்த் தோழன். வரலாற்றில் எவ்விடத்திலும் எம்மத்தியில் மனக்கசப்புகள் நேர்ந்ததில்லை என்று தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே இராஜதந்திர உறவு ஏற்படுத்தப்பட்டு 65 ஆண்டு பூர்த்தி 15

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.10
ஊர்காவற்றுறை, சுருவிலில் குடும் 15

## பூசகர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஜன.10
யாழ்ப்பாணம், அரியாலையில் நேற்று மாலை நடந்த வாள்வெட் 15

## 30 பவுண் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.10
வட்டுக்கோட்டையில் வீடொன்றில் இருந்து தங்க நகைகள் 12

## நீர் அள்ளச் சென்ற பெண் கிணற்றில் வீழ்ந்து சாவு!

கொடிகாமம், ஜன.10
கிணற்றில் நீர் அள்ளச் சென்ற 06

## வாள்வெட்டு நபர் மானிப்பாயில் கைது!

யாழ்ப்பாணம், ஜன.10
கோப்பாய் மற்றும் கொக்குவிலில் வீடுகளுக்குள் புகுந்து வாள் 06

## பாலத்துடன் மோதி ஒருவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜன.10
கண்டாவளையில் நேற்று இரவு நடந்த விபத்தில் ஒருவர் உயிரி 12

## காங்கேசன் – கல்கிசை இடையே நகர்சேர் கடுகதி ரயில் சேவை!

யாழ்ப்பாணம், ஜன.10
காங்கேசன்துறை - கல்கிசை இடையிலான குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயிலின் புதிய சேவை நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு சேவையை ஆரம்பிக்கும் ரயில், 15

### முச்சந்தி முரளி



"சனங்கள் குடிக்கவே கூழ் இல்லையெண்டு அழேக்குள்ள இவைக்கு நடக்கிறதுக்கு சீனாவின்ர நடைபாதை கேக்குதாமோ..."

## அரசியல் எழுச்சிக்கு தலைமையேற்போம்

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜன.10
அரசாங்கத்துக்கு எதிரான பொதுமக்களின் அதிருப்தி தீவிரமடைவதால் இந்த அரசாங்கத்துக்கு எதிரான அரசியல் எழுச்சிக்கு தலைமை 15

## வடக்கில் இன்று முதல் கனமழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.10
இன்று முதல் எதிர்வரும் 17ஆம் திகதிவரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் மித 15



## 'போர்ட் சிற்றி' நடைபாதை மக்கள் பாவனைக்கு திறப்பு



கொழும்பு, ஜன.10
கொழும்பு துறைமுக நகரில் நிர்மாணிக்கப்பட்ட பொது நடைபாதை மற்றும் 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 2 1/2 மணிநேரம் மின் துண்டிப்பு?

கொழும்பு, ஜன. 10

நாளாந்தம் இரண்டரை மணிநேரம் மின் துண்டிக்க மின்சார சபை மின் சக்தி எரிசக்தி அமைச்சுக்கு பரிந்துரைத்துள்ளது என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதன்படி முற்பகல் 11 மணி முதல் மாலை 6 மணி வரைக்குள் ஒரு மணி நேர மின்வெட்டும் மற்றும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை உச்ச நேரங்களில் 45 நிமிடங்களாக இரண்டு முறை மின்வெட்டும் நடைமுறைப்படுத்தப்படும் என மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

டொலர் நெருக்கடி காரணமாக அனல் மின் நிலையங்களுக்கு எரிபொருள் வழங்குவதில் இருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விலகியுள்ளமை, நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தின் மூன்றாவது அலகு மற்றும் கெரவலப்பிட்டி யுகதனவி ஆலையின் ஒரு பகுதி பராமரிப்புக்காக மூடப்பட்டமை, களனிதிஸ்ஸ 115 மெகாவாட்ஸ் எரிவாயு விசையாழி ஆலையில் ஏற்பட்ட பழுது என்பன இந்த மின்வெட்டு நடை முறைக்குக் காரணமாக அமைந்துள்ளன. (ம)

## அறுவடை ஆரம்பம்

# விளைச்சல் ஏமாற்றம்



கிளிநொச்சி,ஜன.10

**கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகப் பயிர்ச்செய்கையின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.**

இந்தப் போகத்துக்கு இரசாயன உரம் விநியோகிக்கப்படாத காரணத்தால், எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை.

கடந்த வருடம் ஒரு ஏக்கரில் 30 தொடக்கம் 40 வரையான நெல்மூடைகள் அறுவடையாகக் கிடைக்கப் பெற்றன. இந்த போகத்தில் 12 தொடக்கம் 15 வரையான மூடைகளே அறுவடையாகக் கிடைக்கப் பெற்றுள்ளன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் இதே நிலைமை நீடித்தால் அடுத்த காலபோக பயிர்செய்கையைக் கைவிட வேண்டிய நிலைமையே ஏற்படும் என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஓ-4,113)



## ஷெல் மீட்பு

சாவகச்சேரி, ஜன .10

சரசாலை தெற்குப் பகுதியில் உள்ள காணி ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆட்லறி ஷெல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. காணியின் உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்த போது ஷெல் ஒன்று காணப்பட்டதையடுத்து, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி நீதிமன்ற அனுமதியுடன் ஷெல்லை மீட்பதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-ரி1,159)

## அரசாங்கம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்

### சஜித் ஆவேசம்

கொழும்பு, ஜன. 10

நாட்டை அழித்த இந்த அரசாங்கம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும் என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நொடிக்கு நொடி, நாளுக்கு நாள் இந்த அரசாங்கம் நாட்டை அழித்து வருகின்றது. இந்த நிலையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்பும் ஆற்றல் ஐக்கிய மக்கள் சக்தியிடமே உள்ளது. விரைவில் இந்த அரசாங்கம் விரட்டியடிக்கப்படும் - என்றார். (ம)




## கொழும்புக்கு சென்ற வவு. இளைஞர் மாயம்



வவுனியா, ஜன. 10

வவுனியா நாகர் இலுப்பைக்குளம் பகுதியிலிருந்து கொழும்புக்குத் தொழில்நிமித்தம் சென்ற இளைஞர் காணாமற் போயுள்ளார்.

வவுனியா நாகர் இலுப்பைக்குளம் பகுதியை சேர்ந்த குறித்த இளைஞர் கடந்த 3 மாதங்களாக கொழும்பில் தங்கியிருந்து தொழில் புரிந்துள்ளார். இந்த நிலையில் கடந்த 6ஆம் திகதி வவுனியாவில் அமைந்துள்ள தனது வீட்டுக்குச் செல்வதாக தனது நண்பர்களிடம் கூறிவிட்டுப் புறப்பட்டுள்ளார். தனது வீட்டுக்கும் அழைப்பெடுத்து, தான் வவுனியாவுக்கு வருவதாக கூறியுள்ளார். இரண்டு நாள்கள் கடந்தும் குறித்த இளைஞர் வீட்டுக்கு வரவில்லை.

இதனையடுத்து அவரது தாயாரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் பாலுசுந்தரம் சுதர்சன் (வயது -20) என்ற இளைஞரே காணாமற் போயுள்ளார். (ம-110)

## தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்

# உச்சக்கட்டக் குழப்பநிலை பதவி நீக்கப்பட்டார் சங்கரி

கிளிநொச்சி, ஜன. 10

தமிழர் விடுதலைக் கூட்டணி பிளவடைந்துள்ளது. அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் என்ற பதவியில் இருந்து வீ.ஆனந்தசங்கரி நீக்கப்பட்டு, யோகராஜா அந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று புதிய நிர்வாகத்தினராக தம்மை அடையாளப்படுத்திய தரப்பு தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினுடைய கூட்டமொன்று கிளிநொச்சியிலுள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கருத்துத் தெரிவித்த கட்சியின் உபதலைவர் ச.அரவிந்தன் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியினுடைய செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி உட்பட கட்சியினுடைய உறுப்பினர்கள் பலரும் கலந்துரையாடியபோது இடைநடுவே ஆனந்தசங்கரி வெளியேறியுள்ளார். அதன் பின்னரேயே அங்கு கூடியிருந்த உறுப்பினர்கள் புதிதாகத் தற்காலிகமான நிர்வாகத்தைத் தெரிவுசெய்துள்ளோம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்காலிகமான நிர்வாகச் செயலாளராக க.கௌரிகாந்தனும் செயலாளர் நாயகமாக க.யோகராஜாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் கட்சி தலைமைத்துவத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். கட்சியினுடைய நிர்வாக நடவடிக்கையை சரியான முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதும் அதற்கு முட்டுக்கட்டையாக செயலாளர் நாயகம் ஆனந்த சங்கரி செயற்பட்டதன் காரணமாக அந்த நடவடிக்கையை மேற்கொள்ளமுடியாமல் இருந்தது. 2020ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலின் பின்னர் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பொதுக்கூட்டத்தை கூட்டிக் கட்சியில் புதிய நிர்வாக மாற்றங்களைக் கொண்டுவந்து கட்சியை தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்து கொண்டு முன் கொண்டு செல்ல வேண்டுமென நாங்கள் எடுத்த முயற்சியை இரண்டு ஆண்டுகளாக கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தை நடத்தாமல் பலவிதமான முட்டுக்கட்டைகளைப் போட்டு இன்றுவரை பல இடர்பாடுகளை ஆனந்தசங்கரி தோற்றுவித்தார்.

இதையடுத்தே தற்காலிகமான நிர்வாகச் செயலாளர் க.கௌரிகாந்தனும் செயலாளர் நாயகமாக க.யோகராஜாவும் புதிய பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி 29ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி தீர்க்கமான முடிவை எடுப்போம்- என்றார். (ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டோடு மோதத் தயாராகும் சுசில்!

கொழும்பு, ஜன.10
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனகட்சி, எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டு, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சவாலுக்குட்படுத்தினால், அதனைச் சட்ட ரீதியாக எதிர்கொள்வதற்கு தயார்.

இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் அரசியலுக்கு புதிதாக வந்தவன் அல்லன். அமைச்சரவைக்கூட்டம் மற்றும் நாடாளுமன்றக்குழுக் கூட்டங்களின் போது வெளிப்படையாகவே கருத்துக்களை வெளியிட்டுவந்துள்ளேன். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கதைப்பதற்குத் தயங்கியதில்லை. சந்தைக்குச் சென்றிருந்தவேளை ஊடகர் ஒருவர் கேள்வி எழுப்பினார், அதற்கு நான் பதில் வழங்கினேன். மக்கள் பிரச்சினையைப் பற்றிக் கதைத்ததால், நான் பதவி விலக்கப்படவில்லை எனவும், புலனாய்வுப் பிரிவு அறிக்கையின் பிரகாரமே பதவி நீக்கப்பட்டதாகவும் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் அறிக்கை புலனாய்வுப் பிரிவின் பிரதானிக்கும், ஜனாதிபதிக்கும் கிடைக்கவேண்டும். சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தால் பாதுகாப்புச் சபையில் கலந்துரையாடலாம். அதைவிடுத்து சாதாரண ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் கைகளுக்கு எப்படி சென்றது என்ற பிரச்சினை உள்ளது.

நான் மொட்டுக் கட்சி உறுப்புரிமையைக் கேட்டுப்பெறவில்லை. அட்டை ஒன்றை வழங்கினார். அதில் இன்னும் ஒப்பம்கூட வழங்கவில்லை. அவர்கள் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து நீதிமன்றத்தை நாடினால், அதற்கு முகங்கொடுப்பேன். எனக்கு பொதுவேட்பாளர் ஆகும் எண்ணம் எல்லாம் இல்லை - என்றார். (எ-44)



## முன்னாயத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.10
நீதிக்கான அணுகுவழி வேலைத் திட்டத்தின் கீழ், வடக்கு மாகாணத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள, முன்னாயத்த வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல், யாழ்.மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிலப்பிரச்சினைகளுக்கான சட்டரீதியான ஆலோசனைகளை வழங்குதல், சட்ட ஆவணங்களை வழங்குதல், பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவு தொடர்பான சட்ட நடவடிக்கைகள், போதைப்பொருள் பாவனையைக் குறைத்தல், பல்கலைக்கழக மாணவர்களுடனான கலந்துரையாடல் மற்றும் சட்ட உதவி விழிப்புணர்வு போன்ற வேலைத்திட்டங்களை நடமாடும் சேவை மூலம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்துக்கான பணிப்பாளர் நாயகம் தீப்தி லம்கேவா, 32 திணைக்களங்களின் அரச அதிகாரிகள், அகில இலங்கை சமாதான நீதிவான் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஒ-4-159)

# தற்சார்புக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்!

### சட்டத்தரணி சுகாஷ் அழைப்பு



**யாழ்ப்பாணம், ஜன. 10**

**வெளிநாடுகளை நம்பி இருக்காது, எமது பகுதியிலுள்ள வளங்களை நாங்கள் பயன்படுத்த வேண்டும். நாம் வெறுமனே கோரிக்கையை மாத்திரம் விடாது, தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் களத்தில் இறங்கவுள்ளோமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டினுடைய பொருளாதாரம் பற்றி அபாயகரமான கருத்துக்கள் வெளியாகி வருகின்றன. தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற வகையில் எங்களுடைய மக்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. அந்த வகையில் நாங்கள் எங்களுடைய மக்களை பொருளாதாரக் கட்டமைப்பின் அடிப்படைகளான விவசாய மீன்பிடியில் தற்சார்பு பொருளாதார நிலையை நோக்கி அழைத்துச் செல்லவேண்டும்.

வீட்டிலேயே தோட்டம் செய்யக்கூடிய வசதியுள்ளவர்கள் தங்களால் பயிரிடக்கூடிய பயிர்களை வீட்டுத்தோட்டத்தில் பயிரிட வேண்டும். விவசாயிகள் தங்களால் முடிந்த அளவுக்கு விவசாய உற்பத்திகளை சேமித்து வைக்க வேண்டும். அதிலும் குறிப்பாக குறுங்கால பயிர்களை மேற்கொள்ளவேண்டும். ஏப்ரல் மாதம் சிவப்பு எச்சரிக்கை காட்டப்பட்டுள்ள நிலையில் சில மாதங்களுக்குள் பயன் தரக்கூடிய குறும் பயிர்களை விவசாயிகள் பயிரிடவேண்டும்.

அந்தந்தப் பிரதேசங்களில் மூலப் பொருள்களைக் கொண்டு, முடிவுப் பொருளை உற்பத்தி செய்வதற்காக சிறு கைத்தொழிலை ஆரம்பிக்கவுள்ள ஆர்வமுடைய இளைஞர்கள் சரியான செயற்றிட்டங்களுடன் எம்மைத் தொடர்பு கொள்ளலாம். அதற்கான வசதிகளை உதவிகளையும் வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். வீட்டுத் தோட்டங்களில் சிறு பயிர்கள் செய்ய விரும்புபவர்கள் எமது பிரதேச அமைப்பாளர்களுடன் தொடர்புகொண்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ம -20)

## மாணவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி

சாவகச்சேரி, ஜன.10
தென்மராட்சிக் கல்வி வலயப்பாடசாலைகளில் கற்கும் 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்று கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியிலும், நாளை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்திலும், நாளை மறுதினம் வரணி மத்திய கல்லூரியிலும், எதிர்வரும் 13 ஆம் திகதி உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும், எதிர்வரும் 18 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், எதிர்வரும் 19 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், எதிர்வரும் 20 ஆம் திகதி கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்திலும், எதிர்வரும் 21 ஆம் திகதி நாவற்குழி மகா வித்தியாலயத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)

## தனியார் பேருந்துகளில் முற்கொடுப்பனவு முறை இந்தமாதம் அறிமுகம்

தனியார் பேருந்துகளில் முற்கொடுப்பனவு அட்டை முறையில் கட்டணங்களைச் செலுத்தும் முறை இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் பேருந்துகளில் முற்கொடுப்பனவு அட்டை முறையில் கட்டணங்களைச் செலுத்தும் முறை இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும். பரீட்சார்த்தத் திட்டமாக மேல் மாகாணத்தில் முற்கொடுப்ப னவு அட்டையின் மூலம் கட்டணங்களைச் செலுத்தும் முறை அறி முகப்படுத்தப்படும்-என்றார். (ம)

மழலைகளின் வெற்றிக்காக யாழ். நகரில்

தரம் 5 → புலமைப்பரிசில் வகுப்பு
கல்வியாண்டு 2022 August

தரம் 4 → ஆரம்ப அடிப்படை வகுப்பு
கல்வியாண்டு 2023 August





புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 14.01.2022 (வெள்ளி)

ஜனவரி மாத வகுப்பிற்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது இலவச வகுப்பில் சகலரும் கலந்து கொள்ளலாம்.
அனுபவமும் ஆற்றலும் நிறைந்த பிரபலம்பெற்ற ஆசிரியர்
யாழ்.நகரில் எமது நிறுவனத்தில் மட்டும்

தரம் 5 2.30 pm
ஆசிரியர் திரு. எம் சுகந்தன்
BA (dip.in.Teach) PGDE
தரம் 4 3.30 pm

- வலி. மேற்கில் கற்பித்தலில் தனக்கென ஒரு தனித்துவமான பாணியைப் பின்பற்றி ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வழிகாட்டி வெட்டுப்புள்ளியைவிட அதிக புள்ளிகளைப் பெறவைக்கும் ஆசிரியர்.
- ஆசிரியரின் நூல்கள் - யுனிலிங்காஸ் பப்ளிகேசன் நிறுவனத்தால் வெளியிட்டு இலங்கை பூராகவும் சகல புத்தகசாலைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன.
- நுண்ணறிவு ❖ வெற்றிக்குவழிகாட்டி ❖ கட்டுரை சங்கமம் போன்ற நூல்களை இன்றுவரைக்கும் தொடர்ச்சியாக வெளியிட்டு அகில இலங்கை ரீதியாக முத்திரை பதித்த மிக பிரபல்யம்பெற்ற ஆசிரியர்.

பெற்றோர் கவனத்திற்கு
- கையேடுகள் வழங்கப்படுவதுடன் வினாப்பத்திரம் I, II ஆகியவற்றிற்கு தனித்தனியாக தொடர் பரீட்சைகள் நடைபெறுவதுடன் ஒவ்வொரு அலகிற்கும் விசேட பரீட்சைகள் நடைபெற்று புள்ளிகள் வழங்கப்படும்.
- மாணவர் முன்னேற்றம் கருதி பெற்றோர் கலந்துரையாடல்கள் நடைபெறும்.

Note: சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி 100 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும் நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்

அலுவலக நேரம் : சனி - ஞாயிறு 12.30 - 5.00 pm
ஏனைய நாட்கள் : 3.30 - 5.00
மேலதிக விபரங்களுக்கு : 077 376 3511

### பயங்கரவாதத் தடைச்சட்டம்

## கைதிகள் தொடர்பான தகவலை வெளிப்படுத்துக

கொழும்பு, ஜன. 10
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் சில தகவல்களை உடன் வெளிப்படுத்த வேண்டுமென்று, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

அதன்படி, கைது செய்யப்பட்ட இடம், தடுத்து வைக்கப்பட்ட இடம் மற்றும் கைது செய்யப்பட்ட நேரம் தொடர்பான தகவல்கள் இ[illegible] ஆணைக்குழுவால் [illegible]ள ன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையிருப்புத் தங்கம் விற்பனை பொருளாதாரத்துக்கு பாதிப்பு

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



**நாட்டின் வசமிருந்த தங்கத்தின் கையிருப்பு, மத்திய வங்கியால் விற்பனை செய்யப்பட்டுள்ளமை, பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பொருளியல் நிபுணருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,விபத்துக்குள்ளாகியிருக்கும் பொருளாதாரம் என்ற விமானத்தைசுமுகமாகத்தரையிறக்கி பயணிகளைக் காப்பாற்றுவதா? அல்லது அந்த விமானத்தைக் கற்பாறையுடன் மோதுவதற்கு அனுமதிப்பதா? என்பதே தற்போதுள்ள கேள்வியாகும். 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 382.2 மில்லியன் டொலராகக் காணப்பட்ட தங்கத்தின் இருப்பு, டிசெம்பர் மாதம் 206.8 மில்லியன் டொலராக வீழ்ச்சியடைந்து, 175.4 மில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளது. நாட்டின் வசமிருந்த தங்கத்தின் கையிருப்பில் அரைவாசிக்கும் அதிகமான தங்கம், மத்திய வங்கியால் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது. 382 மில்லியன் டொலராகக் காணப்பட்ட தங்கத்தின் இருப்பு தற்போது 175.4 மில்லியன் டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. அதே வேளை பரஸ்பர பரிமாற்றல் வசதி அடிப்படையில் சீனாவிடமிருந்து பெறப்பட்ட 10 பில்லியன் யுவான், கடன்களை மீளச் செலுத்துவதற்குப் பயன்படுத்த முடியுமா என்பது குறித்து மத்திய வங்கி தெளிவுபடுத்தவில்லை. மத்திய வங்கி எதிர்வரும் 18 ஆம் திகதி பிணைமுறிகளுக்கான 500 மில்லியன் டொலர் கொடுப்பனவை மீளச் செலுத்தவிருக்கின்றது. ஏனெனில் சிலர் தமக்கு பெருந்தொகையான இலாபம் கிடைக்கக்கூடிய வகையில் உயர் கழிவுக்கு இந்தப் பிணைமுறிகளைக் கொள்வனவு செய்திருக்கின்றனர். ஆகவே இந்த பிணைமுறிகளின் பயனாளிகள் எவர் என்பதை மத்திய வங்கி வெளிப்படுத்த வேண்டும்-என்றார். (ஒ-4-இ)

# சீனா, ஜப்பானிடம் நிவாரணம் கோரல்

## பஸில் முன்வைப்பு

கொழும்பு.ஜன.10
நாட்டில் தற்போது நிலவும் நிதி நெருக்கடிக்குத் தீர்வுகாண சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடம் இருந்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளவது தொடர்பான யோசனை, நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவால், அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

10 பக்கங்களைக்கொண்ட இந்த யோசனை, அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான பேச்சும் நடத்தப்படவுள்ளது.

இலங்கை தற்போது பெற்றுக் கொண்டுள்ள கடன்களில், 20 வீதமானவை ஜப்பான் மற்றும் சீனாவிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சுமூலம் ஏற்கனவே பெறப்பட்டுள்ள கடனைச் செலுத்துவதற்கான காலத்தை நீடிப்பது. அதனைச் செலுத்துவதற்கான நிவாரணக் காலத்தைப்பெற்றுக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. (ஒ-4-இ)

# நடுவில கொஞ்ச பெட்டிகளைக் காணோம்

கொழும்பு, ஜன. 10
கொழும்பு கோட்டையில் இருந்து கண்டி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த செங்கடகல மெனிக்கே எக்ஸ்பிரஸ் ரயிலின் பெட்டிகள் இடையில் கழன்ற நிலையில், ரயில் தொடர்ந்தும் பயணித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மீரிகம மற்றும் கனேகொட ரயில் நிலையங்களுக்கு இடையில் பெட்டிகள் கழன்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதன்பின்னர் ரயில் பின்னோக்கிப் பயணித்து பெட்டிகளைத் தன்னுடன் இணைத்துச் சென்றுள்ளது. (ம)

# ஆரியகுளத்தை அரசியலாக்காதீர்

## ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ். ஆரியகுளத்தில் என்ன விடயத்தை நான் கேட்டேன் என்பதை அறியாமல், ஆரியகுளத்தை வைத்து அரசியல் நடத்த வேண்டாம் என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

விகாராதிபதியால் ஆரியகுளத்தில் மதநல்லிணக்க மண்டபம் ஒன்றை அமைத்துத் தருமாறு மாநகரசபையிடம் கோரிக்கை விடப்பட்டது. அதனை அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

நான் யாழ். மாநகர முதல்வரிடம், ஆரியகுளத்தில் அதிகாலைவேளையில் உடற்பயிற்சி மற்றும் யோகாவை மேற்கொள்பவர்களுக்கு இலகுவாக மதநல்லிணக்கத்தின் ஓர் அங்கமாக மதங்களின் பாடல்களை இசைப்பதற்கு எனது விருப்பத்தைத் தெரிவித்தேன்.

முதல்வர் சபையுடன் கதைத்து பதில் சொல்வதாக தெரிவித்த நிலையில், பதில் கிடைக்காததால் ஆரியகுளம் யாருக்குச் சொந்தம் எனக் கேள்வி கேட்க வேண்டிய நிலைஏற்பட்டது. நான் இந்து மதத்தைச் சேர்ந்தவனாக இருக்கின்ற நிலையில் ஏனைய மதங்களையும் சம உரிமையுடன் பாதுகாப்பேன்.

கண்டி தலதா மாளிகையில் அழகிய மகாவிஷ்ணுவின் உருவச் சிலை இருக்கின்றது. அதற்கு பூ வைத்து வழிபடுகின்றார்கள். அதேபோல் யாழ். நாகவிகாரையிலும் இந்து மத கடவுள்களின் உருவப் படங்களை வைத்து வழிபடுகின்றார்கள். நான் ஆரியகுளத்தில் பௌத்த மயமாக்கலை மேற்கொள்ளப் போகின்றேன், மத அடையாளங்களை நிறுவப் போகின்றேன் என்ற பொருள்கோடலில் பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நான் எனது செயற்பாட்டில் உறுதியாக இருக்கிறேன். வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வேன். ஆகவே வடக்கில் மத நல்லிணக்கத்தின் முன்னோடியாக ஆளுநர் செயலகத்திலிருந்து எனது செயற்பாடுகளை ஆரம்பிப்பேன் - என்றார். (ம-27)

# ஆட்சிப்பீடம் ஏறவே இனவாதம் விதைப்பு

## ரிஷாத் தெரிவிப்பு



மன்னார்.ஜன.10
ஒரு சில அரசியல் தலைமைகள் தாங்கள் ஆட்சிப் பீடத்தில் ஏற வேண்டும் என்பதற்காக, இந்த நாட்டில் இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா பங்கேற்ற பிரபஞ்சம் செயற்றிட்டம், மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகளிர் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த வருட இறுதிக்குள் நாட்டில் என்ன நடக்கப்போகின்றது என்று தெரியாத ஒரு அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. இனவாதத்தையும் மதவாதத்தையும் மூலதனமாகக்கொண்ட அரசால், தான் இவ்வாறான மோசமான நிலைமைக்கு நாடு வந்துள்ளது.

தற்போதைய விலையேற்றம், விவசாயிகளுக்கான பாதிப்பு, எரிவாயுத் தட்டுப்பாடு என மக்கள் அனைத்து வழிகளிலும் துன்பத்தை எதிர்கொண்டுள்ளனர். எனவே இந்த நாட்டில் நல்லதொரு ஆட்சியை வேண்டி, இறைவனைப் பிரார்த்திப்பதே தற்போதுள்ள ஒரேவழி - என்றார். (ஒ-4-56)

# தாயும், மகளும் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.10
முன்னால் சென்ற துவிச்சக்கர வண்டியை, பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியது. அதில் சைக்கிளில் சென்ற தாயும், மகளும் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து மிருசுவில் வடக்கு வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.மிருசுவில் தெற்கைச் சேர்ந்த 26 வயதுடைய தாயும், அவரது 8 வயதுடைய மகளும் விபத்தில் படுகாயமடைந்தனர். இருவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-4-159)

# ஊழியர் மீது இளைஞர்கள் தாக்குதல்

வவுனியா,ஜன.10
மது போதையில் நின்ற இளைஞர்கள் சிலர், தனியார் நிறுவன ஊழியரிடம், பணம்கேட்டு அவரைத் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. மது போதையில் நின்ற இளைஞர்கள், பணம் தருமாறுகேட்டு, வீதியில் நடந்து சென்ற தனியார் நிறுவன ஊழியரை மிரட்டியுள்ளனர். அவர் பணம் கொடுக்க மறுத்ததால், தாக்குதலை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த நபர், வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4-இ)

# ஆடைகளைத் திருடியவர் நையப்புடைக்கப்பட்டார்

வவுனியா,ஜன.10
ஆடை விற்பனை நிலையங்களில், ஆடைகளைத் திருடினார் என்று சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் வவுனியா தர்மலிங்கம் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

அந்த வீதியில் அமைந்துள்ள விற்பனை நிலையம் ஒன்றில் ஆடைகளைத் திருடியவரை, கையும் மெய்யுமாகப் பிடித்த இளைஞர்கள், அவரது கைகளைக் கட்டி நையப்புடைத்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (ஒ-4-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாய சொல்வது பச்சைப் பொய்!

## போட்டுடைத்தார் சம்பிக்க



**கொழும்பு, ஜன. 10**

**மொனராகலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி கோத்தாபய, 'எனது 2 வருடப் பதவிக்காலத்தில் நான் ஒரு சதம் கூட கடனாக வாங்கவில்லை' என்று தெரிவித்திருந்த நிலையில், கடந்த இரு வருடங்களில் இந்த அரசு 5.18 பில்லியன் டொலரைக் கடனாகப் பெற்றுள்ளது என்று வெளிப்படுத்தியுள்ளார் சம்பிக்க ரணவக்க.**

இது தொடர்பில் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவிக்கையில்:
2020ஆம் ஆண்டில் மட்டும் ஆயிரத்து 875 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெறப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டில் மொத்தக் கடன்கள் 3 ஆயிரத்து 300 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் பெறப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் மொத்தமாக 5.18 பில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெறப்பட்டுள்ளது - என்றார். (ம)

# மதுபான விற்பனை: 219 பேருக்கு அனுமதி

கொழும்பு.ஜன.10
2021ஆம் ஆண்டு மதுபான விற்பனைக்கு, 150 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அத்துடன் ஆடம்பர சிறப்பங்காடிகளுக்கு 69 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் எம்.ஜே. குணசிறி தெரிவித்துள்ளார்.
அதேவேளை சாதாரண மதுபான விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் இருந்து அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு எதிராக மதத்தலைவர்கள் பலர் தமது எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர். எனினும் தற்போதைய அரசு கடந்த ஆண்டு அதிகளவிலான மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளது. இதற்கு எந்த மதத் தலைவர்களும் தமது எதிர்ப்புகளைப் பதிவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4-இ)

# சேதனப்பசளைகளுடன் வருகிறது சீனக்கப்பல்!

கொழும்பு, ஜன. 10
சீனாவில் இருந்து சேதனப் பசளைகளை ஏற்றிய முதல் கப்பல் எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதி அல்லது மார்ச் மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
மொத்தமாக சீன நிறுவனத்திடம் இருந்து 96ஆயிரம் மெற்றிக் தொன் சேதனப்பசளைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவை கட்டம் கட்டமாக இலங்கைக்கு எடுத்துவரப்படவுள்ளன. ஏற்கனவே இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட சீன நிறுவனத்தின் சேதனப் பசளைகளில் பக்றீறியா தொற்று இருப்பதாகக் கண்டறியப்பட்ட நிலையில், அந்தப் பசளை நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து இலங்கை மக்கள் வங்கி 6.9 மில்லியன் டொலரை குறித்த நிறுவனத்துக்கு இழப்பீடாகச் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தன் உயிரை மன்றத்துக்காக அர்ப்பணித்தவர் நமசிவாயம்

## வணிகர் மன்றம் பெருமிதம்

சாவகச்சேரி.ஜன.10
போர்ச்சூழலில் தலைமையேற்க எவரும் முன்வராதபோதும், நமசிவாயம் தலைமை ஏற்று தனது உயிரை எமது மன்றத்துக்காக அர்ப்பணித்தார்.
இவ்வாறு வணிகர் மன்றத்தின் உபதலைவரும், நிகழ்வைத் தலைமை தாங்கி நடத்தியவருமான வ.சிறீபிரகாஸ் தெரிவித்தார். சாவகச்சேரி வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில், ச. நமசிவாயத்தின் 28 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கேணல் கிட்டுவின் நினைவுநாள் நிகழ்வில் தலைமை தாங்கி நிகழ்வை நடத்தச் சென்றபோது இடம்பெற்ற வான்வழித் தாக்குதலில் படுகாயமடைந்து 6 நாள்களின் பின்னர் உயிரிழந்தவர் எமது மன்றத்தின் தலைவர்.
28ஆண்டுகள் முடிந்தும் அவரது துன்பமயமான நிகழ்வை மறக்க முடியாது. நமசிவாயத்தின் இழப்பு பேரிழப்பாகும். இந்த நாளை ஒரு புனிதமான நாளாகத் தொடர்ந்தும் கடைப்பிடிப்போம் - என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ-4-159)

# புலனாய்வுத் துறையினரால் அமைச்சர்கள் கண்காணிப்பு?

கொழும்பு, ஜன. 10
அமைச்சர்களுக்குப் பின்னால் புலனாய்வுப் பிரிவினர் களமிறக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலக்கத்தில் உள்ளனர் என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
கடந்த 2ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து சுசில் பிரேமஜயந்த ஜனாதிபதியால் அதிரடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டார். அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்ததன் காரணமாக, அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.
இதையடுத்து, சுசில் பிரேம ஜயந்தவின் பதவி நீக்கம் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இடம்பெற்றதாக பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி அண்மையில் தெரிவித்திருந்தார்.
இதற்குப் பதிலளித்து பேசிய சுசில் பிரேமஜயந்த, அமைச்சர்களுக்குப்பின்னால், புலனாய்வுப் பிரிவினர் களமிறக்கப்படுவதும், பின்வரிசை எம்.பி ஒருவருக்கு இவ்வாறான தகவல் கிடைத்துள்ளமையும் அனைவரும் அவதானிக்கவேண்டிய விடயமாகும் எனக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)




வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், ஒவ்வொரு வருசமும், கலைத்துறையில சாதிச்ச 60 வயசுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு 'கலைக்குரிசில்' எண்டொரு பட்டம் வழங்கிக் கௌரவிக்கிறது எல்லாருக்கும் தெரியும்தானே. அப்பிடி 2021ஆம் ஆண்டும் 16 பேரைத் தெரிவுசெய்து, அதை உறுதிப்படுத்தி அவைக்கு கடிதம்மூலம் தெரியப்படுத்தியிருந்திச்சினம். பிறகு எப்ப விருது வழங்கிற நிகழ்வெண்டு இன்னொரு கடிதம் அனுப்பிச்சினம். அந்தக் கடிதத்தில குறிப்பிட்ட திகதியில விருது நிகழ்வும் நடந்து முடிஞ்சிட்டு. அதில ஒரு சின்னப்பிழை நடந்திட்டு. ஓவியத்துறையில சாதிச்ச ஒரு அம்மாவுக்கு, அவாக்கு விருது கிடைச்சிருக்கு எண்ட விசயத்தை, அந்த அம்மா இப்ப இருக்கிற நல்லூர் அட்ரஸுக்கு கடிதம் போட்டுச் சொன்ன பண்பாட்டலுவல்கள் திணைக்களம், விருது விழா எப்ப எண்ட தகவலை அவையின்ர நிரந்தர முகவரிக்கு- வடலியடைப்புக்கு - மாறி அனுப்பிப் போட்டினம்.

அதால உரிய காலத்துக்குள்ள அந்த அழைப்பிதழ் கடிதம் விருதுக்கு தெரிவுசெய்யப்பட்ட அம்மாவுக்கு போய்ச்சேரேலை. அதால அவாவால விழாவுக்கு போய் விருது வாங்கேலாமல்போட்டுது. இந்த விசயம் விழா முடிஞ்சபிறகுதான் அந்தத் திணைக்களக்காரருக்கு தெரியவந்திருக்கு. வேற ஆக்கள் எண்டால் என்ன செய்திருப்பினம்? 'சரி, நடந்தது நடந்திட்டுது. வேணுமெண்டால் அவாக்கு அடுத்த வருசம் நடக்கிற விழாவில குடுப்பம். இல்லாட்டி அந்த விருதை எங்கட டிப்பார்ட்மெண்டுக்கு வந்து எடுக்கச் சொல்லுவம்' எண்டு தானே நினைச்சிருப்பினம். ஆனால், இப்ப வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்ர உதவிப்பணிப்பாளரா இருக்கிற திருமதி சுஜீவா, 'இப்பிடி ஒரு விருதை குடுக்காமல் விட்டது எங்கட பெரிய பிழை. இதை நாங்கள் தான் சரி செய்யவேணும். ஒரு கலைஞரை ஓரங்கட்டுறது எங்கட டிப்பார்ட்மெண்டுக்கு அழகில்லை' எண்டு சொல்லிப்போட்டு, அடுத்தநாளே விருதுக்கார அம்மா வீட்டுக்கு தானே நேரில போய், அந்த விருதைக் குடுத்திருக்கிறா.

விருது வாங்கின ஓவிய அம்மாவுக்கு கடும் சந்தோசம். ஒருத்தருக்கும் கிடைக்காத மரியாதையெல்லோ அந்த அம்மாவுக்கு கிடைச்சிருக்கு. நிகழ்வு நடக்கேக்க மேடையில வாங்கினால், பதினைஞ்சோட பதினாறாவது ஆளா வாங்கியிருப்பா. ஆனால் இப்ப தனிக் கவனம்எடுத்து, உதவிப்பணிப்பாளரே வீடு தேடி வந்து , நடந்த தவறுக்கு பிரயாச்சித்தமா தன்ர கையால விருது குடுத்தால் அதைவிட ஒரு மரியாதை , சந்தோசம் கிடைக்குமோ?
ஒரு கலைஞரின்ர பெறுமதியை உணர்ந்து, நடந்த பிழையை மூடிமறைக்காமல், அதை உடனேயே சரி செய்ய நடவடிக்கை எடுத்து, அந்த விருதுக்கார அம்மாவுக்கு விருதைக் கொண்டு போய்க் குடுத்த பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்ர உதவிப்பணிப்பாளர் திருமதி சுஜீபா ஜீவதாஸுக்கு பட்சியின்ர 'சல்யூட்'!
இப்பிடியும் பொறுப்பான, பண்பான அதிகாரியள் இருக்கிறதாலதான் இன்னமும் இங்க நல்லமழை பெய்யுது...!



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வழங்கு!

## மாதகலில் இவ்வாறு துண்டுப்பிரசுரம்



யாழ்ப்பாணம், ஜன. 10

**மீனவர்களின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி, மாதகல் பகுதியில் நேற்று துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியால் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.**

கடந்த அரசாங்கங்கள் மக்களை ஏமாற்றி வந்ததைப்போன்று இந்த அரசாங்கமும் மக்களை ஏமாற்றி வருகின்றது. வடக்கு கடற்பகுதி மீனவர்கள், இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். ஆனால், இந்தக் கோரிக்கைகளை அரசு செயற்படுத்தவில்லை. இந்த நாட்டின் மொத்த மீனவர்கள் தொகையில் 20 வீதமானவர்கள் வடக்கைச் சேர்ந்தவர்கள். அவர்களை நம்பி, 2 லட்சம் பேர் உள்ளனர். இவர்களைப்பற்றி இந்த அரசு கணக்கில் எடுப்பதாக இல்லை. இன்றைய ஆட்சியாளர்கள் இந்திய மீனவர்களின் வருகையை திருட்டுத்தனமாக ஆதரிக்கின்றனர்.

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கு ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் கூட்டுப்பொறிமுறை ஒன்றை உருவாக்கிச் செயற்பட வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் வடமாகாண கடற்றொழில் மையத்தின் தலைவர் என். வி. சுப்பிரமணியம், மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளருமான ரத்ன கமகே, அதன் தலைவர் நிகால் கலப்பதி எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-125)

## நீர் அள்ளச்...

பெண் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மிருசுவில், உசனில் நடந்துள்ளது.

வரதராஜன் திலகேஸ்வரி (வயது-57) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

அருகில் உள்ள வீடொன்றில் கிணற்றில் நீர் அள்ளச் சென்றபோதே இவர் கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிணறு உள்ள வீட்டின் உரிமையாளர் மீசாலையில் வசிக்கும் நிலையில், தனது காணியைப் பார்க்கச் சென்றபோது, கிணற்றில் சடலம் இருப்பதை அவதானித்து உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-159)

## வாள்வெட்டு...

வெட்டு வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் மானிப்பாய், புதுமடத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்றும் அவரிடம் இருந்து சுவிய ஆயுதம் ஒன்று கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி கோப்பாய் மற்றும் கொக்குவிலில் உள்ள வீடுகளுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் அடாவடியில் ஈடுபட்டுத் தப்பிச் சென்றது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்றங்களில் 10இக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-26)



# மகாத்மா கிராமத்தில் மாலை நேரக் கல்வி

யாழ்ப்பாணம்,ஜன.10

வடமராட்சி, பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அல்வாய் வடக்கு மகாத்மா கிராமத்தில், மாலை நேரக் கல்வித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

'நாம் செய்வோம்' அமைப்பு அனுசரணையில், சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மாணவர்களின் சுயகற்றலை ஊக்குவிக்கும் நோக்குடன், ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கல்வித்திட்டம் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்து, தினமும் மாலை 4 மணி முதல் 6 மணிவரை இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கிராமத்திலுள்ள மகாத்மா முன்பள்ளிக்கு 'லைவ் பவுண்டேஷன்' நிறுவுநர் அல்பேட் பெஸ்ரியன் தனது சகோதரியின் பிறந்த தினத்தை முன்னிட்டு, சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினார். (ஒ-4,113)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம்

சாவகச்சேரி , ஜன. 10

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த நபருக்கு கடந்த வியாழக்கிழமை நீதிமன்றத்தால் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய சந்தேகநபரை பொலிஸார் சோதனையிட்டபோது 7 பொதிகளில் 27 கிராம் கஞ்சாப் பொதிகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்திய போது அவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஓ-ரி-9)

# மணிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.10

ஊரெழு கணேச வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர் ஞா.அன்ரன் பிரேமதாஸின் மணிவிழா நிகழ்வு, அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது.

அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரால் விழா நாயகன் கௌரவிக்கப்பட்டார். (ரி)



# திருநகரில் மின்தகன மயானத்துக்கு அடிக்கல்

கிளிநொச்சியில் முதல்முறையாக அமைக்கப்படவுள்ள மின்தகன மயானத்துக்கு கடந்த வாரம் அடிக்கல் நடப்பட்டது.

கிளிநொச்சி, திருநகர் பொது மயானத்தில் மின்தகனத்துக்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அதற்கான அடிக்கல்லை நட்டார். நிகழ்வில் நன்கொடையாளர்கள் மற்றும் கரைச்சி பிரதேச சபையினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கிளிநொச்சியில் இதுவரை மின்தகன மயானம் இல்லாத காரணத்தால், வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்துக்கு கொரோனாவால் உயிரிழந்தோரின் சடலங்கள் எடுத்துச்செல்லப்பட்டு எரியூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## செய்யுங்கள் அல்லது செல்லுங்கள்...!

நாட்டின் முன்னேற்றத்துக்காக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டு மென்று அழைப்பு விடுத்திருக்கிறார் ஜனாதிபதி கோத்தாபய. அரச ஊழியர்கள் அடுத்த மூன்றாண்டுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென்றும் கோரியிருக்கிறார்.இலங்கை இப்போது முன்னெப்போதும் இல்லாத நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. உள்நாட்டுப் போர் நடந்த காலத்தில் கூட இவ்வாறான பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டதில்லை. நாட்டின் பொருளாதாரம் நொடிந்து போயிருக்கும் நிலையில், மக்கள் பொருள்களுக்காக வீதியில் வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலைமை உருவாகிவிட்டது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையால் இறக்குமதிகள் தடைப்பட்டுள்ளன. இன்னும் சொற்ப நாள்களில் நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடும், மின்சாரத் தடையும் ஏற்படும் என்ற அபாய எச்சரிக்கைகள் ஒலிக்கின்றன.


உலகம் முழுவதும் பீடித்துள்ள கொரோனாத் தொற்றுப் பரவல் இந்த நிலைமைக்கு ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. கொரோனாத் தொற்றுப் பரவலால் இலங்கையின் வருமான மார்க்கங்கள் அடைபட்டுள்ளன. இலங்கைக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தந்த சுற்றுலாத்துறைக்கும், ஆடை ஏற்று மதிக்கும் கொரோனாத் தொற்றுப் பரவல் பலத்த அடியைக் கொடுத்திருக்கின்றது. ஆனால், இலங்கை எதிர்கொண்டுள்ள சிக்கல் நிலைமைக்கு கொரோனாப்பரவல் மட்டுமே காரணம் என்று கூறிவிட முடியாது. ஆட்சிக்குவந்து, இரு ஆண்டுகளின் பின்னர் இப்போது அனைவரின் ஒத்துழைப்பையும் கோரியிருக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் எதேச்சாதிகாரப்போக்கும், ராஜபக்ச குடும்பத்தினர் அரசாங்கத்தில் கோலோச்சுவதும் கூட இந்த நிலைமைக்கு காரணம் எனலாம். ராஜபக்சவினர் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர், தசாப்த காலத்துக்குத் தங்களை அசைக்க முடியாது என்ற தலைக்கனத்துடன் நடந்துகொண்டதன் விளைவே இது என்றும் கூறமுடியும்.

ராஜபக்சக்களின் வெளிநாட்டுக் கொள்கையும், உள்நாட்டு விவகாரங்களில் தன்னிச்சையாக எடுத்த முடிவுகளும் நாட்டுக்கு நன்மையைக் கொண்டுவரவில்லை. ராஜபக்ச அரசின் அதீத சீனச் சார்ப்பு, ஏனைய நாடுகளில் இருந்து இலங்கையைத் தள்ளி வைத்திருக்கின்றது. உள்நாட்டில் ஒவ்வாதவேளையில் எந்தத் திட்டமிடலும் இன்றி கொண்டுவரப்பட்ட இயற்கை உரப் பாவனைத் திட்டம், நாட்டை இப்போது பட்டினியை நோக்கித் தள்ளியிருக்கின்றது. பல தசாப்த காலத்துக்கும் தங்களை அசைக்க முடியாது என்ற ராஜபக்சவினரின் இறுமாப்பு உடைந்து, நாட்டு மக்கள் நேரடியாகத் திட்டித் தீர்க்கும் சூழ்நிலை இப்போது தோன்றியுள்ள நிலையில்தான் வேறு வழியின்றி அனைவரின் ஒத்துழைப்பையும் கோரியிருக்கின்றார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. பின்னடைவுகளை ஒருகுழுவாக ஏற்றுக்கொள்வது கூட்டுப் பொறுப்பென்றும், குறைகளை மட்டும் விமர்சிப்பது சம்பந்தப்பட்டவரின் திறமையின்மையே என்றும் பாடமும் எடுத்திருக்கிறார்.

ஆட்சிக்கு வந்தது, முதல்அனைத்துத்துறைகளிலும் இராணுவத்தினரை உட்புகுத்திய ஜனாதிபதி, அரச சேவையாளர்களை அலட்சியப்படுத்தியே வந்திருந்தார். அதைப்போன்று அரசியல் முடிவுகளிலும் அனைவரையும் ஒன்றிணைத்துச் செயலாற்றாது தன்னிச்சையான தீர்மானங்களின்மூலம் ஓர் எதேச்சாதிகாரப் போக்கையை கொண்டிருந்தார். ஆனால், அவரின் "என் வழி தனி வழி" என்ற பாணியிலான நடவடிக்கைகள் அனைத்தும் தோற்றுப்போனபின்னர், அந்தத் தோல்விகளுக்கு எல்லோருமாகச் சேர்ந்து பொறுப்பேற்போம் என்று கூறுவது எள்ளளவும் பொருத்தமானதன்று. மற்றவர்களுக்கு அறிவுரை கூறமுன்னர், ஜனாதிபதியும், அதிகாரத்தைக் கைக்குள் வைத்திருப்பவர்களும் தங்கள் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு மிச்சமிருக்கும் 3 வருடங்களுக்காவது சரியான பாதையில் ஆட்சியைக் கொண்டு நடத்த முயலவேண்டும். அவ்வாறு செயற்பட முடியாவிட்டால், நாட்டைக் கட்டியெழுப்பத் தெரியாவிட்டால் அதற்கு பிறர்மீது சாட்டுகளைக் கூறிக் கொண்டிருக்காது பொருத்தமானவர்களின் - பொறுப்பானவர்களின் - கையில் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு வீட்டுக்குச் செல்வதே கோத்தா அன்ட் கோ இந்த நாட்டுக்குச் செய்யும் மிகப்பெரும் சேவையாக இருக்கும்...!

நாளொரு நல்வார்த்தை

"வாழ்க்கை எவ்வளவு கடினமான ஒன்றாக இருந்தாலும், நீங்கள் செய்வதற்கும் சாதிப்பதற்கும் ஏதேனும் ஒரு காரியம் இருக்கவே செய்யும்"
*- ஸ்டீபன் ஹக்கிங்*




# ராஜபக்சக்களின் ஆட்சி இனியில்லை

குமார வெல்கம ஆணித்தரம்



**கொழும்பு, ஜன.10**

**நாட்டு மக்கள் இனியொருபோதும் ராஜபக்சக்களிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்க மாட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
அரசின் தவறான நிர்வாகத்தால் நாட்டு மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மீது நாட்டு மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தொடர்பில் கருத்துரைப்பது பயனற்றதாகும். ஜனாதிபதியால் நாட்டையல்ல ஒரு பிரதேச சபையைக் கூட சிறந்த முறையில் நிர்வகிக்க முடியாது என்பதை நாட்டு மக்கள் தற்போது தெளிவாக உணர்ந்துள்ளனர். எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை முழுமையாக இல்லாதொழிக்கப்படவேண்டும் அல்லது ஜனாதிபதிக்கு மிதமிஞ்சிய வகையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். நாடு தற்போது எதிர் கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பொறுப்புக்கூற வேண்டும் - என்றார். (ஒ-4-இ)

# இலங்கையில் பேரினவாதத்தை ஊக்குவிக்கிறது ராஜபக்ச அரசு

*மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்*

கொழும்பு.ஜன.10
சிறுபான்மையின மக்களை இலக்குவைத்து, வெறுப்புணர்வைப் பரப்புவதன் மூலம், பேரினவாதத்தை ஊக்குவிப்பதிலேயே ராஜபக்ச அரசு கவனத்தைக் குவித்திருக்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் வெளியிட்டுள்ளது
இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி இதனைப் பதிவிட்டுள்ளார்.
தற்போது நாடு பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்ற சூழ்நிலையில், அவற்றுக்குத் தீர்வை வழங்கக்கூடிய சிறந்த தீர்மானங்கள் எவையும் அரசால் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக அத்தியாவசியப்பொருள்களுக்குத்தட்டுப்பாடு நிலவுவதுடன், அவற்றின் விலை அநேகமான மக்களால் கொள்வனவு செய்யமுடியாத அளவுக்கு உயர்வடைந்துள்ளது என்று ஆங்கிலப் பத்திரிகையொன்றின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை மேற்கோள்காட்டி மினாட்சி பதிவிட்டுள்ளதாவது:-
இலங்கையானது நாட்டின் சீரான நிர்வாகத்திலும், மனித உரிமைகளை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக பேரினவாதத்தை ஊக்குவிப்பதிலேயே கவனத்தைக் குவித்திருக்கின்றது - என்றுள்ளது. (ஒ-4-இ)

நாளை

**11.01.2022**
**செவ்வாய்க்கிழமை**
**மார்கழி 27**

சுபநேரம் : 11.03 - 12.33
ராகுகாலம் : 03.33 -05.03
கெர்ப்போட்ட முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கு கொடிக்கம்பம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன.10
'பூமணி அம்மா' அறக்கட்டளையின் ஸ்தாபக தலைவர் விசுவாசம் செல்வராசாவின் ஏற்பாட்டில், சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கடந்த 27 ஆம் திகதி கொடிக்கம்ப மேடை, கொடிக்கம்பம் ஆகியன வழங்கப்பட்டன. அத்துடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் மதிய போசனமும் அறக்கட்டளையால் வழங்கப்பட்டன. (ஒ-ரி1,50)

## வரவேற்பும் ஒன்றுகூடலும்

சாவகச்சேரி, ஜன.10
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் 2022 ஆம் ஆண்டுவரவேற்பு விழாவும் ஒன்றுகூடலும் கடந்த 5 ஆம் திகதி பணியகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சி.சுதோகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பணியக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-ரி1,9)


## கண்ணீர் அஞ்சலி



யாழ். இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற புகழ்பூத்த எமது ஆசான்

**திரு.ந.தங்கவேல்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**முன்னைநாள் யாழ். இந்துக்கல்லூரியின் ஆசிரிய நண்பர்கள்.**

(CR 37311) 1-6

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 09 . 1940
மறைவு 22 . 12 . 2021

**திருமதி அன்னபூரணி கந்தையா (T.S.K)**

யாழ். வேலணை வடக்கு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும். France Pari ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி. அன்னபூரணி கந்தையா அவர்கள் கடந்த (22.12.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2022) France இ ல் நடைபெற உள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புக்கு :
சிவா - மகன் (077 916 2347)
(CS 42134 (3.6)
தகவல்
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## இதய அஞ்சலி



தோற்றம் 02.09.1950
மறைவு 06.01.2022

**இராசையா தெய்வேந்திரன்**

(இந்திரன் ஜுவல்லறி உரிமையாளர் - சாவகச்சேரி)

அபிராமி ஜுவல்லறி ஸ்தாபகரும். எனது மாமனாரும் ஆகிய அமரர் இராசையா தெய்வேந்திரன் அவர்கள் கடந்த 06.01.2022 அன்று இறைபதமடைந்தார். அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளர்,
ஊழியர்கள் (அபிராமி ஜுவல்லறி)

## நன்றி நவிலல்

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிசெய்த நண்பர்கள், உற்றார் உறவினர்கள் மற்றும் அயலவர்கள், பெரியோர்கள், அரசியல் ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், அரச, தனியார் வங்கி முகாமை யாளர், ஊழியர்கள், மருத்துவர்கள், வர்த்தக்கர்கள் மற்றும் வர்த்தக நிறுவ னங்களை மூடி ஒத்துழைப்பை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.11, நவீன சந்தை,
சாவகச்சேரி

அபிராமி ஜுவல்லறி


# தென்மராட்சியில் பெருந்தொற்றுக்கள்

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல்

**சாவகச்சேரி, ஜன. 10**

**தென்மராட்சிப் பிரதேசத்தில் ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் 7 கொரோனாத் தொற்றாளர்களும், 6 டெங்குத் தொற்றாளர்களும், 2 உண்ணிக் காய்ச்சல் தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மருத்துவத்துறை தெரிவித்துள்ளது.**



இது தொடர்பில் துறைசார் அதிகாரிகள் தெரிவித்ததாவது; தென்மராட்சிப் பிரதேசத்தில் பெருந்தொற்றுகள் தீவிரம் பெற்று வருகின்றன. ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் 7 கொரோனாத் தொற்றாளர்களும், 6 டெங்குத் தொற்றாளர்களும், 2 உண்ணிக் காய்ச்சல் தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். இதேவேளை உணவகங்களில், உணவருந்திய இருவருக்கு தைபொய்ட் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். பிரதேசத்தில் கொரோனா, டெங்கு, உண்ணிக் காய்ச்சல் போன்றவை பரவி வருவதால் மக்களைத் தமது குடியிருப்புக்கள் மற்றும் காணிகளில் காணப்படும் நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய நீரேந்துப் பொருள்களை அப்புறப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இரு தினங்களுக்கு மேல் காய்ச்சல் காணப்படின் அருகிலுள்ள மருத்துவமனையில் குருதிப் பரிசோதனை செய்துகொள்ளுமாறு துறைசார் அதிகாரிகளால் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-9)



# தேசிய பாடசாலையாக பளை மத்திய கல்லூரி

கிளிநொச்சி, ஜன. 10
ஜனாதிபதியின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்குக்கு அமைய ஆயிரம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றும் நிகழ்வு, நாடளாவிய ரீதியில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றது.

அன்றையதினம் மு.ப.11.05 மணிக்கு கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி, தேசிய பாடசாலையாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம அதிதிகளாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு, தேசிய பாடசாலையாக மாற்றம் பெற்ற பளை மத்திய கல்லூரியின் பெயர் பலகையை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தனர். (ஒ-ரி-1,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முந்தையநாளின் முயற்சி காரணமாக சிறு வெற்றி உண்டு. குழந்தைகளுக்கு எதிர்பார்த்திருந்த நன்மை ஒன்று வரும். வியாபார விடயமாக மேற்கொள்ளும் பயணம் லாபகரமாக அமையும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். குழந்தைகளால் பெருமிதம் ஏற்படும். பெரிய இடத்திலிருந்து அழைப்பு வந்து உங்களை மகிழ்விக்கும். அடகு வைத்த நகையை மீட்பீர்கள்.

**மிதுனம்:** அலுவலக சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். நிம்மதியும் சந்தோஷமும் அடையும்படியான செய்தி வரும். மனநிறைவு கிடைக்கும்.

**கடகம்:** நீண்ட நாளாக இருந்த அலைச்சல், மன உளைச்சல் முடிவுக்கு வரும். தாய்வழி உறவினர்களுடன் இருந்த மன வருத்தம் தீரும். கடன் வசூல் செய்வதில் வெற்றி கிடைக்கும். நல்லதொரு திருப்பம் ஏற்படும்.

**சிம்மம்:** வீடு மாற இடம் பார்த்தவர்களுக்கு நல்ல பகுதியில் வசதியான வீடு அமையும். அவசர முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். செயலில் கவனம் தேவை. விடயம் ஒன்று சாதகமாக முடியும்.

**கன்னி:** கடன் கொடுத்தல், வாங்குதல் விஷயத்தில் கவனமாக இருங்கள். பணியிடத்தில் சலுகைகள் கிடைக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வசீகரப் பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**துலாம்:** சுபவிடயத்தில் இருந்து வந்த தடைகள் அனைத்தும் நீங்கும். கடனாகக் கொடுத்த பணம் வசூலாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நகை, பொருள்களை வாங்குவீர்கள். பேச்சில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** பணியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. மருத்துவச் செலவு ஒன்று வந்து நீங்கும். பயம் தீரும். புதிய முயற்சியில் இறங்கும் முன் தீர யோசிக்கவும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு:** கருத்து வேறுபாடு உள்ளவருடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வார்கள். சகோதரர்கள் உதவுவார்கள். கூடுதல் ஆர்வம் ஏற்படும்.

**மகரம்:** உங்களின் விருப்பம் ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சிகூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மருத்துவ செலவுகள் குறையும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். நிம்மதி அதிகரிக்கும்.

**கும்பம்:** பணிகளை கவனச்சிதறலின்றிச் சிறப்பாக செய்யுங்கள். மருத்துவச் செலவு ஒன்று ஏற்படலாம். தொழில் சீராக இருக்கும். சில சிரமங்களை சந்தித்தாலும் அவற்றை எளிதாகச் சமாளிப்பீர்கள்.

**மீனம்:** பழைய பாக்கிகளை வசூலிப்பதில் கடுமை காட்ட வேண்டாம். மகிழ்ச்சியான நாள். பிறருக்குக் கடன் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். கூடுதலாக உழைத்து நன்மை காண்பீர்கள். நட்பு வட்டம் விரியும்.




# ஆங்கிலப் புத்தாண்டுப் பலன்கள்




அனைவருக்கும் தங்களால் ஆன நன்மைகளைச் செய்து தானும் வாழவேண்டும் என்று அயராமல் உழைக்கும் மீன ராசி அன்பர்களே! உங்களுக்கு இந்தப் புத்தாண்டு மிகுந்த நற்பலன்களையும் பொறுப்புகளையும் வழங்க இருக்கின்றது.
இந்தப் புத்தாண்டு உங்கள் ராசிக்கு 9 ஆம் ராசியான விருச்சிகத்தில் பிறப்பதால் அனைத்திலும் வெற்றியே உண்டாகும். முடங்கியிருந்த நீங்கள், விஸ்வரூபம் எடுப்பீர்கள். எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்குவரும். இழுபறியாக இருந்த காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். நோய்கள் நீங்கும். மகிழ்ச்சியான சூழ்நிலை வாய்க்கும்.
கடந்த ஆண்டுகளில் குடும்பத்தினருக்காகச் செலவு செய்ய வேண்டியிருந்த நிலை மாறும். திட்டமிட்டுச் சில காரியங்களை முடிப்பீர்கள். குடும்பத்தில் அடுத்தடுத்து சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். வாழ்க்கைத் துணையோடு இருந்த பிரச்சினைகள் நீங்கும்.
உங்கள் ராசிக்கு 9 ஆம் வீட்டில் கேது 20.3.22 வரை சஞ்சாரம் செய்வதால் தந்தைக்கு மருத்துவச் செலவுகளும், அவருடன் வீண் விவாதங்களும் வந்து போகும். தாழ்வு மனப்பான்மையில் திண்டாடுவீர்கள். ஆனால், 3 ஆம் வீட்டில் ராகு சஞ்சரிப்பதால் மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். எதையும் சமாளித்து வெற்றி பெறும் மனப்பக்குவம் உண்டாகும். துணிந்து சில முடிவுகளை எடுப்பீர்கள்.
கேதுபகவான் 8 ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்ய இருக்கிறார்கள். இதனால் மறைமுக எதிர்ப்புகள் உண்டாகும். பணிச்சுமை காரணமாக அலைச்சல் அதிகரிக்கும். பேச்சில் மிகுந்த கவனம் தேவை. யதார்த்தமாகப் பேசுவதைக்கூட சிலர் தவறாகப் புரிந்துக் கொள்வார்கள். வாகனத்தை இயக்கும்போது மிகுந்த கவனம் தேவை. செல்போன் பேசிக்கொண்டே வாகனம் இயக்குவது போன்ற விடயங்களைச் செய்ய வேண்டாம். எப்போதும் பிறர் விடயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது.
திடீர் பயணங்களால் அலைச்சல்கள், செலவுகள் அதிகரிக்கும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தூக்கமின்மை, கனவுத் தொல்லை, ஒருவிதப் படபடப்பு வந்து செல்லும். கோயில் போன்ற பொது இடங்களில் முதல் மரியாதைக் கிடைக்கும்.
ஆனால் 14.4.2022 முதல் வருடம் முடியும் வரை குருபகவான் ராசிக்குள்ளேயே வந்து அமர்கின்றார். பொதுவாக ஜன்ம குரு என்றால் நற்பலன்கள் குறையும் என்பது ஜோதிடர்களின் கருத்து. ஆனால் குரு உங்கள் ராசி நாதனாகவும் இருப்பதால் பிரச்சினைகள் வந்தாலும் அதைத் தீர்த்து வைப்பவராகவும் இருப்பார். ஆரோக்கியம் சிறிது பாதிக்கும். பணிச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். உணவுகளால் அஜீரணம், ஒவ்வாமை போன்றவை ஏற்படும்.
குடும்பத்தில், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது மிகவும் அவசியம். தேவையற்ற விவாதங்களைத் தவிர்த்திடுங்கள். விலையுயர்ந்த ஆபரணங்களைக் கவனமாகக் கையாளுங்கள். இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்துபோகும். பல வருடங்களாகப் பழகிய நண்பர்கள்கூடக் காரணம் இன்றிக் கோபித்துக்கொள்வார்கள்.
ஆனால், சனிபகவானின் சஞ்சாரம் உங்களுக்கு மிகவும் சாதகமாக உள்ளது. லாப வீடான மகரத்தில் சனி ஆட்சிபலம் பெற்று சஞ்சரிப்பதால் திடீர் யோகம், பணப்புழக்கம், பதவிகள் ஆகியன தேடிவரும். திட்டமிட்ட காரியங்களைத் தடையில்லாமல் முடிப்பீர்கள். புதுச்சொத்து சேரும்.
பணிச்சுமை இருந்தாலும் அதிகாரிகள் உங்களை மதிப்பதால் உற்சாகமாகச் செயற்படுவீர்கள். இடமாற்றம் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை சாமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள். ஜனவரி மாதத்தில் உங்களின் தகுதி உயரும். ஜூன் மாதத்தில் புதிய வேலை வாய்ப்புகள் தேடிவரும்.
பதவி உயர்வுகளும் தேடிவரும். மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு அவ்வப்போது உங்களை ஆழம் பார்த்தாலும், [illegible] தொலைநோக்குப் பார்வையாலும் வெற்றியடையச் செய்யும்.

# இந்தியாவில் ஒமிக்ரோன் 3,623ஆக உயர்வு

புதுடில்லி, ஜன.10
இந்தியாவில் இதுவரை ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3ஆயிரத்து 623 ஆக உயர்ந்துள்ளது என மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.
ஒமிக்ரோன் வைரஸ் இந்தியா முழுவதும் வேகமாகப் பரவி வருகின்றது. இதுவரை மராட்டியம், டில்லி, ராஜஸ்தான், கேரளா, கர்நாடகம், குஜராத், தமிழ்நாடு, தெலுங்கானா, அரியானா, ஒடிசா, உத்தரபிரதேசம், ஆந்திரா உள்ளிட்ட 27 மாநிலங்களில் ஒமிக்ரோன் தொற்றுப் பதிவாகியுள்ளது.
இதில் மராட்டியம், டில்லி, ராஜஸ்தான், கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் ஒமிக்ரோனின் மோசமான பாதிப்புக்குள்ளான முதல் 5 மாநிலங்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
(ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 02 . 1953



மறைவு 09 . 01 . 2022

## திருமதி இராஜேஸ்வரி துரைரட்ணம்

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி துரைரட்ணம் அவர்கள் நேற்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பொன்னையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பரிபூரணம் - லூர்த்தம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், துரைரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும், துஷாந்தன், கிரிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், யாழினி, அனுஷா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கீர்த்திஷன், சக்திஷன், கிளேயர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், விஜயகுமார் (சின்னராசு), குசலகுமார் (சிவன்), உதயகுமார் (ஈசன்), காலஞ்சென்ற நந்தகுமார் (கண்ணன்), சாரதா (சுதா), ஜெயந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், துரைநாயகம், ஜீவரட்ணம் (ஜீவா), ஜெயரட்ணம் (ஜெயா), றூபவதி (றூபா), லீலாவதி (லலிதா), ஜெபரட்ணம் (பபி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 3.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைவாணி மில் வீதி,
கொக்குவில் கிழக்கு.
077 3611 323

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவுடன் கூட்டுச்சேரும் மொட்டு அதிருப்தியாளர்கள்!

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, ஜன.10

**இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள சுசில் பிரேமஜயந்த மற்றும் அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்துவரும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்றமை தெற்கு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யின் ஸ்தாபகத் தலைவரான அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி .பண்டார நாயக்கவின் 123ஆவது ஜனன தினம் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. கொழும்பு, காலி முகத்திடலிலுள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும் நினைவுகூரல் நிகழ்வு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட, ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்தவும் இந்நிகழ்வில் பங்கேற்றார்.

அதேபோன்று அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சிக்கும் நல்லாட்சியின்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்த தற்போதைய மொட்டுக் கட்சி உறுப்பினர்களான அநுர பிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி மற்றும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க, ஜீவன் குமாரதுங்க உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர். இது கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலும் நேற்று முற்பகல், காலி முகத்திடலில் பண்டாரநாயக்க வுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (எ-44)

# பூஸ்டர் டோஸுக்கு மக்கள் முண்டியடிப்பு

சாவகச்சேரி,ஜன.10

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றுவதற்கு பெருமளவானோர் குவிந்ததால், கிளிநொச்சியிலிருந்து மேலதிகமாகத் தடுப்பூசிகள் பெறப்பட்டன.

பணியகத்தில் பூஸ்டர் தடுப்பூசியின் கையிருப்பு முடிந்தமையால், 100பேருக்கு ஏற்றக்கூடிய தடுப்பூசிகள், யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தி லிருந்து பெறப்பட்டன. இந்த நிலையில் இந்தியா செல்லவுள்ள ஐயப்பன் பக்தர்கள் உட்பட பெருமளவு மக்கள் தடுப்பூசி ஏற்றுவதற்காக ஒரேநாளில் குவிந்தனர். இதனால் கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்திலிருந்து மேலதிக தடுப்பூசிகள் எடுத்துவரப்பட்டன. (ஒ-4-9)


## பணியாளர் தேவை

யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண் / பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுனர் உடன் தேவை.

தொடர்பு: 076 659 5578

(CR 5662) 1-6



## யாழ்ப்பாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு

R.I.B Group (Pvt) Ltd நிறுவனத்தில்

1. கணக்காளர் (Accountant)
2. Account Clerk
3. வாகன சாரதி (Heavy Vehicle)
4. விற்பனை பிரதிநிதி (Sales Rep)

Salary Pakge 50000.00

குறைந்தது 03வருட அனுபவம்

வயது (25-35)

உரிய ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்

நேர்முகத்தேர்வு : 12.01.2022

நேரம் : முற்பகல் 10.30 - மதியம் 12.30

இடம் : இல-83, காதி அபூபக்கர் வீதி யாழ்ப்பாணம்.

தொடர்பு எண் : - 077 388 3879

(CS 1073) 1-6


# தென்மராட்சிக்கு ரூ.31.5 மில்லியன்

சாவகச்சேரி,ஜன.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான குடும்பங்களுக்கு, ஜனாதிபதி செயலணியின் கொவிட்19 தடுப்புப் பிரிவால், 31.5 மில்லியன் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசத்தில் 3 ஆயிரத்து 893 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன. 2 ஆயிரத்து 144 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. ஏனையோர் பாதிக்கப்பட்டவர்களுடன் நேரடித் தொற்றாளர்களென தனிமைப்படுத்தப்பட்டனர் .

தனிமைப்படுத்தப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும், பிரதேச செயலகத்தால், தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் விநியோகிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)




# உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்.போதனா மருத்துவமனைக்கு கடந்த 3 ஆம் திகதி உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இராணுவ அதிகாரி சேனக செனவிரத்னவின் ஏற்பாட்டில், அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களின் நிதியில், இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில், இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, மருத்துவமனைப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா, சி .எஸ். யமுனானந்தா, 51 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க, 512 ஆவது படைப்பிரிவின் படைத் தளபதி, இராணுவத்தினர், மருத்துவமனை நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-ரி)


## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரிமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி திருமதி த.ஜெனனி அவர்களின் தந்தை

**நாகமணி செல்வசிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட மாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்

(CR 5663) 1-6



## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 25 . 06 . 2017



ஆண்டவன் அடியில் 09 . 01 . 2022

**செல்வன் விஜேந்திரன் ஆரணன்**

நாரந்தனை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் விஜேந்திரன் ஆரணன் நேற்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் விஜேந்திரன் சிந்துஜாவின் இளைய மகனும், விந்துஷன், விசான், அசானன், ஆரபி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரநிரூபசிங்கம்-இரத்தினாம்பாள், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் கலாநாயகி (சித்தங்கேணி) ஆகியோரின் பேரனும், கனீந்திரன், காலஞ்சென்ற சுரேந்திரன் மற்றும், கஜேந்திரன், அழகேந்திரன் ஆகியோரின் பெறா மகனும், சசிகலா, ஜெயகலா ஆகியோரின் மருமகனும், சித்தங்கேணியைச் சேர்ந்த யுகதீசன், நேருஜன் ஆகியோரின் மருமகனும், வேணுசா, யதுசா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2022) திங்கட் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நாரந்தனை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பெற்றோர் விஜேந்திரன் சிந்துஜா

(CS 1075) 1-6




# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்.மாவட்ட தேசோதய தலைவர் லயன் நா. தனேந்திரனின் பேரனின் 6ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, பெரியபுலம் பாடசாலையில் கற்கும் 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கோப்பாய் தேசோதய காரியாலயத்தில் வழங்கப்பட்டன. (ஒ-ரி)

தென்மராட்சியில் இயற்கை இடர்

# பாதிக்கப்பட்டோருக்கு ரூபா 8.42மில். இழப்பீடு

சாவகச்சேரி ஜன. 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடாக 8.42 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரேவிப் புயல் மற்றும் அதன் பின்னரான வெள்ள இடர் என்பவற்றால் பாதிக்கப்பட்ட 689 குடும்பங் களுக்கே இந்த இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 12 . 1943



மறைவு 07 . 01 . 2022

## திரு.நடேசர் சிவனேசன்

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.நடேசர் சிவனேசன் அவர்கள் 07.01.2022 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசர், தங்கம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, இளையபிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசோதி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதாசினி (பிரான்ஸ்), கதிர்காமநாதன் (கனடா), சிவாஜினி (கொழும்பு), பத்மசீலன் (கனடா), ஸ்ரீகரன் (பிரான்ஸ்), கௌசினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு தந்தையும், சச்சிதானந்தம் (பிரான்ஸ்), சிவரஜனி (கனடா), கேதீஸ்வரன் (கொழும்பு), ஜிமிலா (கனடா), ஜெயந்தினி (பிரான்ஸ்), சிவானந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜாணன், காயத்ரி, அனிருத்தன், ஸ்ரவன், மதுரா, சன்ஹர்சன், அஹஸ்தியா, அநனியா, சாய்னா, அனிஸ், ஆரபி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்ணன் (மருமகன்)
T.P: 077 3638 155

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1069) 1/6

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை – யாழ்ப்பாணம்
## தேசிய வங்கிகளினால் நிதியளிக்கப்படும் "100,000km" வேலைத்திட்டம்
## கேள்வி கோரல்
### அலுவலக பாவனைக்கு வான் வாடகைக்கு அமர்த்தும் கேள்விகோரல்

"100,000km" வேலைத்திட்ட பயன்பாட்டிற்கான வாகனம் மூடிய கேள்வி கோரல்கள் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாணம். கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| விபரம் | காலம் | தேவையான வாகனங்கள் | |
|---|---|---|---|
| அலுவலக பாவனைக்கான வான் (VAN) சாரதி, எரிபொருள் உட்பட வான் உற்பத்தி திகதி 7 ஆண்டுகளுக்கு உட்பட்டதாகவும் இருக்கைகள் 10ற்கு குறையாமல் இருக்க வேண்டும். குளிரூட்டி வசதிகள் தரமானதாகவும் இருக்க வேண்டும். | 12 மாதம் | யாழ்ப்பாணம் பிரதம பொறியிலாளர் அலுவலகம் | 1 |
| | | யாழ்ப்பாணம் நிறைவேற்றுப் பொறியிலாளர் அலுவலகம் | 1 |
| | | பருத்தித்துறை நிறைவேற்றுப் பொறியிலாளர் அலுவலகம் | 1 |
| | | மொத்தம் | 3 |

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 10.01.2022ம் திகதி முதல் 19.01.2022 திகதி பிற்பகல் 3.00மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் 19.01.2022 3.30 மணிக்கு திறக்கப்படும்.


**ஆர்வம் காட்டும் வழங்குனர்கள்**

கேள்விப்பத்திரங்கள் தயாரிப்பதற்குரிய விண்ணப்ப படிவங்கள் பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் மீளச் செலுத்தப்படாத ரூ.1000.00 வற்வரி உள்ளடங்காத கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் 10.01.2022 முதல் 18.01.2022 வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம இயந்திரி
வீ.அ.அ.சபை
யாழ்ப்பாணம்

(CR 37301) (3.6)

# மரண அறிவித்தல்



## அமரர்.திரு. நல்லையா தங்கவேல்

### ஓய்வு நிலை ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**பிறப்பு - 04.01.1953 | இறப்பு - 09.01.2022**

யாழ். நாரந்தனையை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.நல்லையா தங்கவேல் அவர்கள் 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நல்லையா அன்னலெட்சுமி (கண்ணம்மா) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிராசா வல்லவாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், சசிகலா ( ஓய்வு நிலை ஆசிரியை யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயம் ) அவர்களின் அன்புக்கணவரும் சிவமைந்தனன், இரகுநந்தனன் ஆகியோரின் பாசமிகுதந்தையும் மகேஸ்வரி, பத்மநாதன், காலஞ்சென்ற, வசந்தானந்தன் மற்றும் நடேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 10.01.2022 திங்கட்கிழமை மு.ப 9 மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 1 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் – குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு 0777851910 (சிவமைந்தனன்)
0771022648 (இரகுநந்தனன்)

34/1,பரமேஸ்வரா வீதி, 4 ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 06 . 1961



இறப்பு 09 . 01 . 2022

## திரு. இராமகிருஸ்ணன் மகேந்திரன் ஆச்சாரி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமகிருஸ்ணன் மகேந்திரன் ஆச்சாரி நேற்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமகிருஸ்ணன் லெட்சுமி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை பவளம்மா தம்பதிகளின் மருமகனும், வசந்தராணியின் அன்புக் கணவரும், வினோ, அகிலஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகுமரனின் அன்பு மாமனாரும், ஆருத்ராவின் அன்புப் பேரனும், சதாசிவம் (அமரர்) மற்றும் பரமசிவம், நாகராசா (அமரர்) மற்றும் சத்தியபாமா, ஜெயமதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

26/68, பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
077 395 7258

தகவல்
குடும்பத்தினர்

(CS 42138 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை அழைப்பு



கடந்த 14.12.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## பேராசிரியர். கனகசபாபதி நாகேஸ்வரன்

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.01.2022) செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணிக்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் கங்காதரணி தீர்த்தக் கரையிலும் எதிர்வரும் (13.01.2022) வியாழக்கிழமை வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்தில் முற்பகல் 9.00 மணிக்கும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.82-6/1 ஹம்டன் ஒழுங்கை,**
**வெள்ளவத்தை, கொழும்பு - 06**

(CS 42094)(3.6)

**குடும்பத்தினர்**
**077 474 2106**

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 25 . 04 . 1955



விண்ணுலகில் 18 . 12 . 2015

## திருமதி தனபாக்கியம் சூரியகுமாரன்

**ஓய்வு நிலை எழுதுவினைஞர், தரம் 1, பிரதேச செயலகம் தென்மராட்சி, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி**

அன்பு அம்மாவே! எங்களுக்கு உயிர்தந்த உத்தமியே!
ஆண்டுகள் ஆறு ஆகிவிட்டது நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
இவ்வுலகில் உங்களுக்கு நிகர் எவருமில்லை எங்களுக்கு
ஈடில்லா அன்புத் தெய்வமாக சுவரில் உங்கள் படத்தை பார்த்து ஏங்குகின்றோம்
உங்களின் நினைவுகளும் ஆலோசனைகளும், எங்களை வழிநடத்துகின்றன.
ஊருக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினீர்கள்
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்.

**கேணியடி வீதி,**
**மீசாலை மேற்கு.**


(CR 36965 (3/6)

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

# மரண அறிவித்தல்

## தம்பையா நித்தியரத்தினம்

**(முன்னாள் ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி. யாழ்ப்பாணக் கல்லூரி)**



**மண்ணுலகில் 18.04.1935**
**விண்ணுலகில் 08.01.2022**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும். கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தம்பையா நித்தியரத்தினம் (08.01.2022) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா சிவகாமிப்பிள்ளையின் புதல்வரும் காலஞ்சென்ற ஞானரத்தினம் ஜீவமணியின் மருமகனும். ஜெயமணியின் அன்புக் கணவரும் (ஓய்வுபெற்ற ஆசிரியர் வட்டு. இந்துக் கல்லூரி). தனஞ்செயன் (UK). காலஞ்சென்ற நித்தியராஜன் (Canada). ஜெயநிதி (ஆசிரியர். சைவமங்கையர் வித்தியாலயம் கொழும்பு). ஜெயவதி (ஆசிரியர். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும் லக்சுமிதேவி. ருத் வசந்தி. ஜீவரூபன் ( Nexus property director Colombo). தனராஜன் (பிரதேச செயலகம். யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் ஹரிப்பிரணவி. ஹரிநிவாஜினி. ராம் நிவேதனன். லிடியா நடாஷா. றேச்சல் நடானியா. ஜீவாஸ். ஜீவினி. திவ்வியராஜ். நிரேஷ் ராஜ் ஆகியோரின் பேரனும். காலஞ்சென்றவர்களான ஆனந்தரத்தினம். ஆறுமுகநாதன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஜெயராஜா. ஜெயரத்தினம் ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வையிட் ஹவுஸ் மலர்ச்சாலை. 180 பிரதான வீதி யாழ்ப்பாணம் (White House Florist 180, Main street, Jaffna (10.01.2022) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியில் இருந்து பிற்பகல் 6.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்படும். (11.01.2022) செவ்வாய்க் கிழமை மதியம் 12.00 மணியிலிருந்து மானிப்பாய் வீதி கோப்பாய் மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு(12.01.2022) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இறுதி நல்லடக்க ஆராதனை நடைபெற்று புனித மரியாள் ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"ஞானபதி", கோப்பாய் மத்தி.**
**கோப்பாய்**

தகவல் :
**குடும்பத்தினர்.**
தொ.பே.இல : 077 104 3575, 077 700 8279

*போர்ட் சிற்றி'....*

றம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் தலைமையில் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீயின் பங்கேற்பில் இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இந்த நடைபாதை இன்று முதல் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது என்றும், காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை அந்தப் பகுதியை பொதுமக்கள் பயன்படுத்த முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் அமைந்துள்ள நுழைவின் ஊடாக பொதுமக்கள் நடந்து செல்லும் வகையில் அந்தப் பகுதி நிர்மாணிக்கப் பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-இ)

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஆனந்த் சுகந்தினி அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் இராசையா தெய்வேந்திரன்



அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.**

(CS 42121) (3.6)

# மரண அறிவித்தல்



## கதிரவேலு ஆறுமுகம்

**(பிரபல காங்கேசன்துறை சீமெந்து விற்பனை முகவர், யாழ் – கொழும்புக்கிடையிலான பேருந்து ஆசனப் பதிவாளர்)**

கண்டியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் தெல்லிப்பபழை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஆறுமுகம் கடந்த (06.01.2022) வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2022) திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது தெல்லிப்பழை இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பழை கொத்தாவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆனந்த பவனம்,**
**இல.147C, பிரதான வீதி,**
**தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.**

(CS 00948) (3.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 222 3280**
**077 925 4914**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 16 . 03 . 1948



**மறைவு** 08 . 01 . 2022

## திருமதி பாலசுப்பிரமணியம் சௌந்திராம்பிகை

களபூமியைப் பிறப்பிடமாகவும் கூமாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் சௌந்திராம்பிகை அவர்கள் நேற்று முன்தினம் (08.01.2022) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மீனாட்சியின் பாசமிகு மகளும். பாலரஞ்சினி. பாலகுமார். பாலகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும். யாதவன். கயானி. பிரவீன். பிரதாப். சங்கவி. அர்ச்சனா ஆகியோரின் பேர்த்தியும். ஆறுமுகநாதன். குறிஞ்சிராசா. உதயா ஆகியோரின் மாமியாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2022) திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கூமாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**10/50, திருநாவலர் வீதி,**
**கூமாங்குளம் , வவுனியா.**

(CS 00948) (3.6)

**தகவல்: குடும்பத்தினர்**
**077 944 9620**

*30 பவுண்...*

திருடப்பட்டுள்ளன என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

சுழிபுரம் வடக்கில் உள்ள வீடொன்றிலேயே நகைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. நேற்றுக்காலை வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் முப்பதரைப் பவுண் நகைகள் திருடப் பட்டுள்ளன என்று வீட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

வீட்டின் உரிமையாளர் , தனது உறவினர் ஒருவரின் மீது சந்தேகம் தெரிவித்துள்ளார் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

*பாலத்துடன்...*

ழுந்துள்ளார். மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வெளிகண்டல் பாலத்துடன் மோதி விபத்து நடந்தது என்று தெரிவிக்கப் படுகின்றது.

கட்டைக்காடு, பெரியகுளத்தைச் சேர்ந்த ப.ரவிந்திரன் என்பவரே உயிரிழந்துள்ளார். சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 - 12 - 1967

மறைவு
10 - 01 - 2018



## அமரர் பேராசிரியர் கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினம்


(தென்கிழக்கு, கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில இலக்கிய விரிவுரையாளரும், எதியோப்பியப் பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில இலக்கியப் பேராசிரியரும்)

அன்னாரின் நினைவு தினத்தினையொட்டி வடமாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து செயல்திறன் அரங்க இயக்கமும் கலாநிதி விஜயரத்தினம் கென்னடி ஞாபகார்த்த நிதியமும் நடத்திய தனி நடிப்புப் போட்டிப் பரிசளிப்பு விழாவும் மற்றும் நாடக மேடையேற்றங்களும் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் யா/ காரைநகர் இந்துக் கல்லூரி நடராஜா மண்டபத்தில் இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

மனைவி, சகோதரர்கள்
மற்றும் குடும்பத்தினர்.

(CS 42140) (3.6)

# மரண அறிவித்தல்



## திருமதி நடராசா சரஸ்வதி

அரசடி வீதி வடலியடைப்பை பிறப்பிடமாகவும், அளவெட்டி மத்தி அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா சரஸ்வதி நேற்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நடராசாவின் அன்பு மனைவியும், மகேஸ்வரியின் அன்புச் சகோதரியும், ஸ்ரீசுதன், சுதர்சன், சுமதி, குருபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தினி, அன்பரசி, சசிகரன், சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசம்மா, சுப்பிரமணியம், அம்பிகாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

077 7958 107
077 559 4089

(CS 1072)1-6

# மரண அறிவித்தல்

பிறப்பு
30 - 10 - 1930

இறப்பு
08 - 01 - 2022



## மரியான் திரேசம்மா

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியான் திரேசம்மா கடந்த (08.01.2022) காலமானார்.

அன்னார் இராசேந்திரம் ஆனாசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியானுடைய பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.01.2022) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு நாவாந்துறை புனித மரியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்புச் சகோதரி - பிரான்சிஸ் தங்கம்.

(CS 1070) 1/6

# மரண அறிவித்தல்

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது"
(சங் 116:15)

அன்னை மடியில்
02 - 11 - 1932

இறைவன் மடியில்
09 - 01 - 2022



## யோவர் சக்கரியாஸ் ஆசீர்வாதம்

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் சங்குவேலி டச்சு வீதியை வதிவிடமாகவும் கொண்ட யோவர் சக்கரியாஸ் ஆசீர்வாதம் (09.01.2022) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யோவர் சக்கரியாஸ் பெலோமினாவின் சிரேஸ்ட புதல்வனும் ராயேஸ்வரி, யேசுதாசன் ஆகியோரின் அன்பு சகோதரனும், ஜெசிந்தா (சின்னமணி)யின் பாசமிகு கணவனும், செல்வராணி, (ஏஞ்சல் சர்வதேச பாடசாலை உப அதிபர்), ரஞ்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் கீத்தாவின் பாசமிகு மாமனாரும், ஆன் ஜெர்னி (ஜேர்மன்), டல்றின் (பிரான்ஸ்), கிரியன்சி, செறோன், டிவோன்கா, செகான், ஸ்ரெபான், டிவேன், ரெவ்னிடியா ஆகியோரின் பாசமிகு பேரனும், அஸ்வின் மேதாத்கிறிஸ், சயான், ஸைனிக்கா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.01.2022) திங்கட் கிழமை ஆலடி சூசையப்பர் ஆலயத்தில் பி.ப 1.00 மணிக்கு இடம் பெற்று, பின்னர் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி, சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
077 627 9298, 076 6439 617

(CS 1074)1-6

தகவல்:
குடும்பத்தினர்

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## கந்தையா தர்மகுலசிங்கம் (ரவி)
[K.T.M Oil Mill உரிமையாளர்]

10.01.2022

இமைகள் மூடித்திறப்பதற்குள்
வருடம் மூன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில்
உம் நினைவுகள் எம்முடன் என்றென்றும்
வாழும் ..... வாழும் ....... வாழும் .......

K.T.M Oil Mill
கல்வியங்காடு.

(CS 1067)1-6

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## பின்வரிசை உறுப்பினர்களை அமைச்சர்களாக்கத் திட்டம்!

இலங்கையில் அடுத்த வாரம் மீள மைக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் அமைச்சரவையில் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடமளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில் அண்மையில் நாடாளுமன்றத்தில் தகாத வார்த்தைப் பயன்பாடு தொடர்பில் சர்ச்சைக்குள்ளாகியிருந்த திஸ்ஸ குட்டியாராச்சியின் பெயரும் உள்ளடங்கியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இதனை திஸ்ஸ குட்டியாராச்சி மறுத்துள்ளார். தமக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நிலையே போதுமானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையில் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அதிருப்தியாளர்கள் சிலரையும் இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



பிறப்பு 10 . 02 . 1940

இறப்பு 11 . 12 . 2021

## அமரர் திருமதி வேலாயுதபிள்ளை பொன்னம்மா

இணுவில் கிழக்கைச் சேர்ந்த அமரர் திருமதி வேலாயுதபிள்ளை பொன்னம்மா அவர்கள் சிவபதமடைந்ததையறிந்து வீட்டிற்கு வருகை தந்தோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கியவர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவி-த்துக் கொள் கின்றோம்.

அத்துடன் இன்று (10.01.2022) திங்கட்கிழமை அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
வே.லிங்கேஸ்வரன்
077 5ll 2395

திரு- திருமதி தர்மகுலசிங்கம் (பாபு)
அமுதகெளரி (கெளரி)
பேரப்பிள்ளைகள் : திலக்சன், அபிசனா, எழிலன்
(சுவிஸ்)

(CS 42014) (3.6)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 02 . 1936

மறைவு 22 . 12 . 2020

## அமரர் கதிர்காமர் கோபாலபிள்ளை

திதி : 10.01.2022

யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கதிர்காமர் கோபாலபிள்ளை அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

எம்மையெல்லாம் ஆழாத்துயரில் ஆழ்த்தி தவிக்கவிட்டு
நீங்கள் மறைந்து ஓராண்டு கடந்தாலும்,
இன்றும் உங்கள் நினைவால் நாம் வாடுகின்றோம்
ஓராண்டல்ல எத்தனை காலம் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்மை விட்டகலா.
தங்கள் அன்பை என்றென்றும்
எண்ணித் தவியாய்த்தவிக்கும்

மனைவி,பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்
மற்றும் நண்பர்கள்

குடும்பத்தினர்.

(CS 1062)(3/6)

# மரண அறிவித்தல்



மலர்வு 24 . 06 . 1947

உதிர்வு 07 . 01 . 2022

## திருமதி தம்பையா. சொர்ணலட்சுமி

(சொர்ணம்)

கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தம்பையா சொர்ணலட்சுமி கடந்த (07.01.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.மு.தம்பையா (நெடுந்தீவு - ஓய்வுபெற்ற அலுவலர், யாழ் இந்துக் கல்லூரி), அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பு - இராசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வியும், தாட்சாயினி (ஆசிரியை, புத்தூர் மடிஹே பஞ்ச சீஹ வித்தியாலயம்), தயாளினி (சுவிஸ்), கமலசொரூபன் (சுவிஸ்), தர்மினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசீலன், தேவானந் (சுவிஸ்), சிம்மவாஹினி (சுவிஸ்), விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மாறஜனகன், தீபிகா, ஹரிஸ்ராஜ், ரம்யா, சௌமியா, கவிந், கம்ஸவர்த்தனி, கார்த்திகன், கவிநயா, சஞ்சனா, சஞ்சித், சந்தோஸ் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், பாக்கியநாதன், அன்னம், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபத்மநாதன், கணநாதன், குருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.3, சிவன் புதுவீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்
071 900 2793, 077 582 8955

(CS 42132 ) (3/6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 29 . 06 . 1953

இறப்பு 08 . 01 . 2022

## திருமதி அருள்யோசேப் சித்திரலேகா பாக்கியநாயகம்

(யாழ்ப்பாணம் விவசாய கல்லூரி முன்னாள் அதிபரும்,
அமெரிக்கன் இலங்கை மிசன் பிறஸ் முன்னாள் முகாமைளர்)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. அருள்யோசேப் சித்திரலேகா பாக்கியநாயகம் அவர்கள் நேற்று முன்தினம் (08.01.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆசீர்வாதம் அருள்யோசேப்பின் (யோசித்திரா பிரிண்டஸ் உரிமையாளர் கொழும்பு, தென் இந்திய திருசபை அமெரிக்கன் மிசன் முன்னாள் பொருளாளர், கிரீன் மெமோரியல் ஆஸ்பத்திரி மானிப்பாய், மக்கிளியட் ஆஸ்பத்திரி இணுவில் முன்நாள் நிர்வாக பொறுப்பாளர், அமெரிக்கன் இலங்கை மிசன் பிறஸ் முன்னாள் முகாமையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பண்டிதர் செல்லமுத்து செர்ணபூமலர் தம்பதி யினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற காந்திமதிநாதன் (UK), மற்றும் கோபால சந்திரநாதன் (கனடா), சத்தியபாஸ்கரநாதன் (கனடா), காலஞ்சென்ற குலசிங்கநாதன் (கனடா), மற்றும் குலேந்திரநாதன் (கனடா), போசரட்டிணநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விஜயராணி (UK) மற்றும் ராசாத்தி (கனடா), காலஞ்சென்ற அருள்மலர்தேவி (கனடா), மற்றும் மகுலேஸ்வரி (மன்னார்), கிருபாநிதி (கனடா), சாந்தி (கனடா), காலஞ்சென்ற அருள்நாயம் (சட்டத்தரணி கிளிநொச்சி) மற்றும் மரியதாஸ் (ஓய்வுபெற்ற தபால் அதிபர் - யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற புஸ்பராசா (துன்னாலை) மற்றும் அருள் தேவரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், நிசாந்தன், நிசாந்திகா, போல்சுரேந்திரநாதன், நயோமி, ஏனேஸ், ஜெரிக்கா, திரேஸ், றோ, யூலியன், ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உடுப்பிட்டி திருச்சபை மயானத்தில் இன்று (10.01.2022) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
ஆசீர்வாதம் அருள்யோசேப் (கணவர்)
077 930 5722

(CS 42135 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவிக்காலத்தை...

"கொரோனாப் பெருந்தொற்றால் உங்களுக்கு இரண்டு வருடங்கள் இல்லாமல் போய்விட்டன. சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி ஏன் அந்தக் காலத்தை பெறக்கூடாது ?என கண்டியில் வைத்து இளைஞர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார்." என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்திருந்தார். இதன்மூலம் பதவிக் காலத்தை நீடிக்கும் எண்ணத்தில் அவர் உள்ளமை புலப்படுகின்றது என்று அரசியல்நோக்கர்கள்சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மாத்தறை மாவட்டக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது

"எந்தத் தலைவரும் தனித்து அரசை நிர்வகிக்க முடியாது. அதேபோல நாட்டை முன்னோக்கி அழைத்துச்செல்லவும் முடியாது. சிறந்த குழுவொன்று இருந்தால் தான் அது சாத்தியப்படும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மொட்டுக் கட்சியினர் தேடி வந்தனர். மொட்டு கட்சியின் முதல்நிலைத் தலைவர்கள்கூட தனித்தனியே வந்து என்னைச் சந்தித்தனர். இதன்பிரகாரம் கூட்டணி அமைத்து தேர்தலை எதிர்கொண்டோம். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற முதல் வாரமே கூட்டணி ஒப்பந்தத்தை மீறிச்செயற்பட்ட னர். கடைசியில் கறிவேப்பிலையின் நிலைதான் எமக்கு. நன்றாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

தூய்மையான ஆட்சியை முன்னெடுக்க தனிமனிதனாகப் போராடினேன். அப்போதுகூட நாட்டை இவ்வாறானதொரு நிலைக்கு நான் தள்ளிவிடவில்லை. நல்லாட்சியின்போது பொருள்கள் குறைந்த விலைக்கு வழங்கப்பட்டன. எரிபொருள் விலை கூட ஓரிரு ரூபாவால்தான் அதிகரிக்கப்பட்டது. அதற்குக்கூட எதிர்ப்பு தெரிவித்து, மொட்டு கட்சித் தலைவர்கள் சைக்கிளில் பவனி வந்தனர். பொருட்களை காண்பித்து 'இப்போது சந்தோஷமா?' எனக் கேட்டனர். ஆனால் இன்று என்ன நடக்கின்றது?

இந்த வருட இறுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம். அதன்பிறகு நிச்சயம் தேசியமட்டத் தேர்தல் என்றால் அது நாடாளுமன்றத் தேர்தலாகவே அமையும். சிலர் சர்வஜன வாக்கெடுப்பு பற்றி அங்கும், இங்கும் கதைக்கின்றனர். நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடித்துக்கொள்வதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினார். சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி, அரசின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு முற்பட வேண்டாம். அது ஒருபோதும் நடக்காது-என்றார். (எ-44)

## தள்ளிப்போகின்றது...

வுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் ஓராண்டு பிற்போடப்பட்டால் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி கட்டாயமாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் ஓராண்டு காலப்பகுதிக்கு மாத்திரமே பிற்போட முடியும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதானால் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் வெளியிடப்பட வேண்டும். இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு கொரோனத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் தற்போது பிரிட்டனில் உள்ளமையால் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவது தாமதமடைந்துள்ளது.

அதையடுத்து இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவிடம் உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான விடயங்கள் மற்றுமொரு அமைச்சுக்கு வழங்கப்பட்ட பின்னரே, உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடும் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஒருவாரத்தில் மற்றுமொரு அமைச்சின் ஊடாக இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என்று அறிய முடிகின்றது. அதேவேளை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக உள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## இன்றுமுதல்...

வழங்கியுள்ளது.

இன்று முதல் ஒரு மணித்தியாலம் முதல் இரண்டு மணித்தியாலம் வரையான மின்வெட்டு நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எரிசக்தி அமைச்சால் மின்சார சபைக்கு எரிபொருள் வழங்கப்படாமை மற்றும் களனி திஸ்ஸ அனல் மின் நிலையத்தில் உள்ள மின்பிறப்பாக்கி ஒன்றில் ஏற்பட்டுள்ள பழுது காரணமாகவே மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## கிணற்றில் தவறி...

காலை நடந்துள்ளது.

விஜயேந்திரன் ஆரணன் (வயது-04) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

சிறுவனின் தந்தை தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது, தோட்டத்துக்குச் சென்ற சிறுவன் கிணற்றின் அருகே விளையாடிக் கொண்டிருந்துள்ளான். சிறுவனைக் காணாது பெற்றோர் தேடியபோது சிறுவன் கிணற்றில் சடலமாகக் காணப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ-25)

## சீனா எம்...

மற்றும் புகழ்பெற்ற இறப்பர் அரிசி ஒப்பந்தத்துக்கு 70 ஆண்டுகள் பூர்த்தியாகின்றமையை முன்னிட்டு சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ பங்கேற்புடன் கொழும்பு துறைமுக நகரில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சீனா நமது உயிர் தோழன். வரலாற்றில் எவ்விடத்திலும் எம்மத்தியில் மனக்கசப்புகள் நேர்ந்ததில்லை. முன்பு இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, அப்போதைய பிரதமர் சௌசன்லாய் இலங்கைக்கு தேவையான உணவுப் பொருள்களை அனுப்பி மிகவும் மதிப்புமிக்க செய்தியை அனுப்பினார். 'உங்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை நீங்களே உற்பத்தி செய்துகொள்ளுங்கள். அதுவே சுதந்திரத்துக்கான வழி.' நாம் அந்தப் பாதையைக் கடைப்பிடித்தோம். இன்று முழு உலகமும் ஏற்றுக்கொள்ளும் இயற்கை விவசாயத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். கொரோனாத் தொற்றால் அது தடைப்பட்ட போதிலும், முழு உலகுக்கு ஒரு முக்கிய முன்மாதிரியாக விளங்கவே முயற்சித்தோம். 2013 ஆம் ஆண்டு ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கு எதிராக ஐ.நா பொதுச் சபையில் பிரேரணையை முன்வைத்த காலமும் எனக்கு நினைவிருக்கிறது. பெரிய வல்லரசாக சீன அரசு எங்களுக்காக முன்நின்றது. அது எமது நாடு போன்று ஆசிய நாடுகளின் சுதந்திரத்துக்காக சீனா செய்த மாபெரும் தியாகம் என்றுதான் கூற வேண்டும். சீனா கொரோனாத் தொற்றுநோயை மிகச் சிறப்பாகக் கட்டுப்படுத்தி உலகுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. விரைவில் தடுப்பூசியை உருவாக்கி உலகுக்கு தைரியம் அளித்தனர். முதல் சுற்றிலேயே சீனத் தடுப்பூசியை நாங்கள் நம்பியிருந்தோம். சீன அரசாங்கமானது எமக்கு செய்ததைப் போன்றே, நாடுகளின் சுதந்திரத்துக்கு மதிப்பளித்து உதவி செய்கிறது. நிபந்தனைகளை விதித்து தலையிடும் கொள்கை சீனாவிடம் இல்லை. எங்களைப் போன்ற நாடுகள் அத்தகைய கொள்கையையே எதிர்பார்க்கின்றன- என்றார். (எ-இ)

## காங்கேசன்...

யாழ்ப்பாணம் முதன்மை ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 1.37 மணிக்கு சேவையை ஆரம்பித்து கொழும்பை இரவு 8 மணிக்கு சென்றடையும்.

இதுவரை காலமும் 5 குளிரூட்டப்பட்ட பெட்டிகளுடன் சேவையில் ஈடுபட்ட இந்த நகர்சேர் கடுகதி சேவை இன்று முதல் மேலதிகமாக 3 பெட்டிகளை இணைத்து 8 பெட்டிகளுடன் சேவையில் ஈடுபடவுள்ளது. இதன்மூலம் பயணிகளின் எண்ணிக்கை 360ஆக அதிகரிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்று அதிகாலை 5.10 மணியளவில் கல்கிசையிலிருந்து சேவையை ஆரம்பித்த தொடருந்து நண்பகல் 12.15 மணிக்கு யாழ்ப்பாணம் முதன்மை ரயில் நிலையத்தை வந்தடைந்தது. அங்கிருந்து காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு பயணத்தைத் தொடர்ந்தது. முதலாவது சேவையில் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட பிரதேச போக்குவரத்து அதிகாரியை யாழ்ப்பாணம் முதன்மை ரயில் நிலைய தலைமை அதிபர் ரி.பிரதீபன் வரவேற்றார். இந்தியாவின் 318 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் கீழ் ரயில் இந்தியா தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சேவைகள் நிறுவனம், இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கு குளிரூட்டப்பட்ட வசதிகளுடனான டீசல் ரயில்கள் இரண்டை இலங்கைக்கு வழங்கியது. அவற்றில் ஒன்றே வடக்குக்கான சேவையில் நேற்று முதல் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கடனுதவி திட்டத்தின் கீழ் மாஹோ முதல் ஓமந்தை வரையிலான 128 கிலோ மீற்றர் ரயில் பாதை சீரமைப்பு, மாஹோ முதல் அநுராதபுரம் வரையிலான சமிக்ஞை வலையமைப்பு திட்டம், பொல்காவலை முதல் குருநாகல் வரையிலான இரட்டை ரயில் பாதை திட்டம் உள்ளிட்ட திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. (எ-இ)

## அரசியல்...

வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது என்று அந்தக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் பொதுக் கொள்கையுடன் செயற்பட எந்தக் கட்சியும் முன்வரலாம்.மேலும் தற்போதைய ஜனாதிபதி போராட்ட அரசியலையே மேற்கொண்டு வருகிறார். நான் பௌத்தனாகவுள்ளேன். ஆனால் மத வேறுபாடு, இன வேறுபாடு காட்டாமல் எல்லோரையும் இலங்கையர்களாகவே பார்க்க வேண்டும். அதையே ஜனாதிபதியும் செய்யவேண்டும்.

நமது ஆட்சியில் வீட்டுத் திட்டங்களை வழங்கியிருந்தோம். ஆனாலும் கூட தற்போது வந்த அரசாங்கம் அந்த வீட்டு திட்டங்களுக்கான நிதிகளை வழங்காமல் மக்களிடம் விளையாட்டுக்களைக் காட்டி வருகின்றது.

ஆளும் தரப்பின் அமைச்சர்கள் தற்போது நீக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு வெளியே விடப்படும் அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன தலைமையில் மாற்று சக்தியாக உருவாகுவதற்கு சாத்தியமில்லை.

2023 நடுப்பகுதிக்குள் நாடாளுமன்ற தேர்தலை நடத்தவேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படும். ஆயினும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் இல்லாத பொதுவேட்பாளரை நிறுத்தும் ஆதரிக்கும் எண்ணம் கட்சிக்கு இல்லை. என்றார். (எ-இ)

## வடக்கில்...

மானது முதல் கன மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. கடும் இடி, மின்னலுடன் மழை பெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால், மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 04 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் பரவலாக மழை வீழ்ச்சி கிடைக்கும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (எ-இ)

## குடும்பஸ்தர்...

பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தவறான முடிவெடுத்து அவர் உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

ரமேஷ்குமார் (வயது39) என்பவரே நேற்று தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-25)

## பூசகர்...

டுச் சம்பவத்தில் இளம் பூசகர் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

வீதியோரம் நண்பர்களுடன் நின்றவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

தலைப் பகுதியில் காயமடைந்த பூசகர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபைக்கு எரிபொருளை தொடர்ந்து விநியோகிக்கமுடியாது

## கைவிரித்தார் அமைச்சர்



**கொழும்பு, ஜன.10**
**இலங்கை மின்சார சபைக்குத் தொடர்ந்து, கடன் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்க முடியாது என்று வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தேசிய எரிபொருள் விநியோகக் கட்டமைப்புக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்யும்போது, எதிர்கொண்டுள்ள டொலர் நெருக்கடியை வலுசக்தி அமைச்சும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஒவ்வொரு முறையும் முகாமைத்துவம் செய்கின்றன. இதனால் டொலரைத் திரட்டிக் கொள்வதற்கு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். இந்த நிலைமையில் தொடர்ந்து எம்மால் கடன் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்கமுடியாது. மின்சார சபை தமக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு டொலரைத் திரட்டிக் கொடுத்தால், தடையில்லாமல் எரிபொருளை வழங்க முடியும். பிச்சை எடுப்பு வரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு, வறுமை நிலைமையில் உள்ளவரிடம் ஒப்படைத்தற்கு இணையான செயற்பாடாகக் காணப்படுகின்றது. எனவே பிறிதொரு அமைச்சின் நிதி நெருக்கடியை எம்மால் முகாமைத்துவம் செய்ய முடியாது- என்றார். (ஓ-4.இ)

# மாலை 6 மணிக்கு முன் உணவைத் தயாரியுங்கள்

## மின்சாரசபை கோரிக்கை

கொழும்பு, ஜன. 10
மின்சார அடுப்புகளைப் பயன்படுத்தி சமைக்கும் நுகர்வோர் மாலை 6 மணிக்கு முன்னதாக உணவைத் தயாரிக்குமாறு இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.
இனிவரும் நாள்களில் மின்வெட்டு அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படும்.
எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் பல்வேறு நேரங்களில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், மின்சார சபை இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ம)

# பால் வடியும் வேப்பமரம்

பளை, ஜன.10
பளை, அரத்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க அரத்தி அம்மன் ஆலய வளாகத்திலுள்ள வேப்பமரத்தில், கடந்த சில நாள்களாக பால் வடிகின்றது என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.
முன்னொருபோதும் இவ்வாறான சம்பவம் இடம் பெறாத நிலையில், இதனை அதிசயமாகக் கருதி, மக்கள் ஆர்வத்துடன் சென்று பார்வையிட்டு வருகின்றனர். கடந்த ஆண்டுகளில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திலும் இவ்வாறு பால் வடிந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4.113)

**KBK Accounting College**
*கந்தர்மடம் *கொழும்புத்துறை
A/L கணக்கீடு | Gr.10,11 வணிகமும் கணக்கீடும்
திரு.கி.பா.பாலகஜன் M.Com 077 216 8884
(ஏ.957) (2.6)

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணம் நல்லூரில் இயங்கும் City tex புடைவையகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது. (CS 42141) (3.6)
021 221 6185

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடி பாதையுடன் 90 பரப்புக் காணி 1 1/2. பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (மேட்டுநிலம், நிலபரப்பு, நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 km தூரம்)
ஒரு பரப்பின் விலை 4 லட்சம்.
தொடர்பு: 077 911 6983, 077 658 5999, 077 288 0152, 077 623 4204. (CS 9869) 1-6

# விண்ணக வாழ்வில் 31ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 20.02.1945 மறைவு 11.12.2021

கடந்த 11.12.2021 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் முருகேசு சின்னத்தம்பி

**(கடைச்சின்னத்தம்பி)**

**(உரிமையாளர் – சின்னத்தம்பி ஸ்ரோர்ஸ், உதயன் பத்திரிகை முகவர்)**

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" (திருக்குறள்)

அன்பின் உறைவிடமே நல் பண்பின் விளைநிலமே
கண்ணும் கருத்துமாய் எமை காத்த தந்தையே
எண்ணும் எழுத்தும் எமக்களித்த இறைவனே
விண்ணும் மண்ணும் வியந்து நிற்கும் மானிடமே.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு அனுதாபங்கள் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி நுணாவில்
சாவகச்சேரி. (CS 42131) (3.6) குடும்பத்தினர்

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 08 . 02 . 1946 மறைவு 11 . 12 . 2021

கடந்த 11.12.2021 ஆம் திகதி சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த

## அமரர் இளையதம்பி சுப்பிரமணியம்

**(இளைப்பாறிய மின்சாரசபை ஊழியர்)**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (10.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வருகைதந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூக வலையத்தளங்களின் ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (CS 1063) (3.6)

வைரவர் கோயில் அருகாமை,
ஊரெழு வடக்கு, சுன்னாகம். குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.